ண்ணன்

1-9-58

13 ந.பை

11



# கண்ணன் தபால்கள்

திருநாளைப் போவார் நாயனர் கதை வெகு ஜோர். கிங்கரனுக்கு எனது பாராட்டுகள். —சிவமணி, நல்லமாங்குடி.

தொடர் கதை காளிகோட்டை ரகசியம் மிகவும் அற்புதமாக அமைந்திருக்கிறது. எழுத்தாளர் அறிமுகம் பிரமாதம்.
—ஆ. பழனிச்சாமி, குடந்தை,

எ. ந. கணபதி அவர்கள் எழுதிய பாட்டைத் தெரியாமல் நான் எழுதிவிட்டேன். மன்னிக்கவும்.
—கோ. வேங்கடாசலபதி, தேனி.

ஏழு சகோதரிகள் வெறும் தண்டம். மற்றவை நன்ருக இருந்தன. மாதம் மும்முறையாக ஆக்குங்கள் கண்ணனை.
—கே. பாலசுப்பிரமணியம், மேல மாம்பலம்.

'முன்னும் பின்னும்' என்ற கவிதை அருமையாக இருந்தது. நீங்களும் நானும் பகுதிக்கு அதிகப் பக்கங்கள் ஒதுக்குங்கள். சிவப்பு மாளிகையை எழுதியவர் யாரோ?
—எஸ். வரதராஜன், பங்களூர் ஸிடி.

தமிழ் ஒளியின் பாடல் அற்புதம்; அருமை! கண்ணன் மிகவும் தாமதமாக வருகிறது. இதை, இனி என்னல் பொறுக்க முடியாது.
—சு. முருகேசன், தேனி.

திருடனும் நிலவு ஏணியும் நன்ருக இருந்தது.
—சின்ன முனியப்பன், எரியோடு

எ. ந. கணபதியை அழகாக அறிமுகம் செய்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட அறிமுகங்கள் எழுத்தாளர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை. —அழ. வள்ளியப்பா, சென்னை -7

அட்டைப்படம் அழகாக இருந்தது. அண்ணன் கடிதங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. காலம் சொல்லும் கதை கண்ணனுக்கு ஏற்ற பகுதி அல்ல. —ம. கார்த்திகேயன், கேளம்பாக்கம்.

காளிகோட்டையில் நல்ல கட்டம் வந்துள்ளது. அண்ணன் கடிதம் அழகாய் இருந்தது. சிவப்பு மாளிகை நீண்டு விட்டது. கண்ணன் வார இதழாக எப்போது வரும்? காலம் சொல்லும் கதை பெரியவர்களுக்கான பகுதிபோல் தோன்றுகிறது.
—என். கிருஷ்ணமூர்த்தி, கொரடாச்சேரி

அண்ணன் கடிதம் அறிவை வளர்ப்பதாக இருக்கிறது.
—எ. ந. கணபதி, பெரியாறு திட்டம்.

கண்ணனுக்கு வரும் கவிதைகள் குறைந்து விட்டதா? எழுதி அனுப்பட்டுமா?
—சு. முருகேசன், சந்திரகிரி.

வாத்தியார் வாஞ்சி நல்ல கருத்துக்கொண்டது. சிவப்பு மாளிகை சி. ஐ. டி. சிங்காரத்தையும் மஞ்சள் பங்களாவையும் நினைவூட்டுகிறது.
—ஆர். சந்தானராமன். செங்கல்பட்டு.

பளபளவென்று பளிச்சிடுகிறது கண்ணன் அட்டைப்படம். 'ஜண' யார் என்பதை அவருடைய ஆற்ருெழுக்குப்போன்ற நடையே காட்டிக் கொடுக்கிறது. ஆகாயக் கோட்டை என்ற கதையின் கற்பனை சாம்பார் இல்லாத இட்லிபோல இருக்கிறது. —அமிழ்தன், பம்பாய் - 28

ஒரு குறை! புதிய சித்திரத் தொடர் ஏதும் தொடங்கவில்லையே!
—கோ. சுவாமிநாதன், தெ. க. பெ. நத்தம்.

மலர் 9 இதழ் 17

1—9—1958

# குழந்தைகளே !

சுதந்தர தின இதழின் அட்டைப் படத்தையும் உள்ளுறையையும் பாராட்டி எழுதியிருப்பவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற இதழில் வெளியான இரண்டு புதிய பகுதிகளைப்பற்றி உங்கள் கருத்துக்களைப் பட்டவர்த்தனமாக எழுதியனுப்பும்படி கேட்டிருந்தேன். அதன்படி வந்த கடிதங்கள் எத்தனை எத்தனையோ! எல்லாரும் ஒருமுகமாக 'அண்ணன் கடிதங்கள்' என்ற பகுதியைப் பாராட்டியிருக்கிறார்கள். மற்றொரு பகுதியான 'காலம் சொல்லும் கதை'யைப்பற்றி இரண்டு விதக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அது நன்றாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். மற்றும் சிலர் அது இன்னும் பெரியவர்களுக்குரிய பத்திரிகையில் வரத் தகுந்தது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை எல்லோரும் ரசிக்கும் முறையில் மாற்றி வெளியிட விரும்புகிறேன்.

சென்ற இதழில் முழுநீளக் கதை, 'சிவப்பு மாளிகை' வெளிவந்ததைப் பாராட்டிப் பலர் எழுதியிருக்கிறார்கள். அதை எழுதியவரின் பெயரை நாங்கள் வேண்டுமென்றேதான் வெளியிடவில்லை. பெயரைப் பார்த்துவிட்டு விமரிசனம் மாறிவிடக்கூடாது என்றே அதை அப்படி விட்டிருந்தேன். உங்களுடைய ஒருமுகமான பாராட்டைப் பெற்ற அந்தக் கதையை எழுதியவர் ஒரு மாணவி. ஆர். ராதா என்பது அவள் பெயர்.

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



## எஸ். விசுவநாதன்

எடுத்த எடுப்பிலேயே எழுத்தாளனாகி விட்ட நண்பர் எஸ். விசுவநாதன் சேலத்தைச் சேர்ந்த இளைஞர். இருபது வயதுக்குள்ளே எழுத்துலகிலே விரைவில் புகழ்மிக்க இடம் பெற்றுவிட்டிருந்தாலும் ஏதோ ஓர் அலுவலகத்தில் சுருக்கு-தட்டெழுத்தாளராகத்தான் பணிபுரிந்து வருகிறார் இவர். கண்ணனில் எழுதுகின்ற விசுவநாதன் யார் என்று கேட்காத எழுத்தாளர்களோ வாசகர்களோ இல்லை என்பது என் அனுபவம். கண்ணனில் 'காகிதப் படகு' என்ற கதை ஒன்றை எழுதி, ஆயிரக்கணக்கான அன்பர்களின் பாராட்டைப் பெற்றுவிட்டார். கண்ணனைத் தவிர கல்கண்டு, சுதேசமித்திரன் வாரப்பதிப்பு, பிரசண்ட விகடன் முதலிய பெரியவர்கள் பத்திரிகைகளிலும் அடிக்கடி எழுதி எழுத்துலகிலே மணம் வீசும் மலராகத் திகழ்கிறார்,

''எழுத்தாளன் ஆதல் எளிதாம்-எழுதுமுன் எண்ணம் திருந்தும் எனின்'' என்ற பாடலைக் குறிக்கோளாகக் கொண்டு எண்ணத்திலும் எழுத்திலும் சிறந்து விளங்கும் விசுவநாதன் இன்னும் பல நூறு கதைகள் படைத்து எழுத்துலகை வளப்படுத்துவார் என்பது என்னுடைய முடிவான நம்பிக்கை. பார்க்கலாம்!

# கவர்னர் ஸி. பி. என். சிங்



ஸிந்துவின் ஐந்து நதிகள் பாய்ந்து வளம் கொழிக்கும் பஞ்சாப் ராஜ்யத்தின் கவர்னராக இருப்பவர் ஸ்ரீ ஸி. பி. என். சிங். இவர் பீஹார் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையின் பெயர் கிருஷ்ண கிஷோர். இன்று இவருக்கு ஐம்பத்தேழு வயதாகிறது. முஸாபர்பூர் கல்லூரியிலும் கல்கத்தா பல்கலைக் கழகத்திலும் பயின்று, எம். ஏ. பட்டம் பெற்றவர்.

இவருக்குத்தான் பொதுத்துறைகளில் எத்தனை அநுபவம் இருந்திருக்கிறது! சைமன் கமிட்டி என்ற குழுவில் இவர் சில காலம் அங்கத்தினராகப் பணியாற்றியிருக்கிறார். பின்பு பிரம்பு மார்க்கெட்டிங் போர்டில் கௌரவச் செயலாளராக இருந்திருக்கிறார். பீஹாரும் ஒரிஸ்ஸாவும் சேர்ந்து ஒரே ராஜ்யமாக இருந்தபோது மேல் சட்டசபையில் அங்கம் வகித்திருக்கிறார். மாகாண சட்டசபையில் நிலச்சுவான்தார்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முஸபர்பூர் ஜில்லா போர்டுத் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுக் காலம் பதவி வகித்திருக்கிறார். மற்றும் தேசீய யுத்த முனைக் கமிட்டியிலும் மாகாண எழுத்தறிவியக்கக் குழுவிலும் விமானம் ஓட்டும் கிளப்பிலும் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்து இவர் பழுத்த அநுபவம் பெற்றிருக்கிறார்.

1930-இல் பாட்னா சர்வகலாசாலையின் துணை வேந்தராக இவர் நியமிக்கப்பட்டார். பிறகு நேபாள ராஜ்யத்துக்கு இந்தியாவின் தூதராக நியமனம் பெற்றார். இப்பொழுது பஞ்சாப்பின் கவர்னராக இருந்து வருகிறார்.

இன்று ஏழு குழந்தைகளுக்குத் தந்தையாக விளங்கும் ஸ்ரீ சிங் அவர்களுக்கு டென்னிஸ் விளையாட்டென்றால் உயிர். வேட்டைக்குச் செல்வது, ஓவியம் வரைவது, குதிரைச் சவாரி செய்வது இதெல்லாம் அவருக்குப் பிடித்தமான பொழுது போக்குகள். பழுத்த அநுபவமும் இனிய சுபாவமும்கொண்ட ஸி. பி. என். சிங்கின் முழுப் பெயர் சந்திரேசுவர் பிரசாத் நாராயண் சிங் என்பதாகும். சிம்லாவிலுள்ள ராஜ்பவனத்தில் தான் அவர் இப்போது வாசம் செய்து வருகிறார்.




கோவி. மணிசேகரன்

மதுரை மாநகரைப்பற்றி நீங்கள் நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்தப் பண்டைக்காலத்துத் தலைநகரம்தான், கபாடபுரத்துக்கு அடுத்த படியாக நீண்ட நாட்களாக நமக்குப் பெருமையளித்து வருவது.

ஆயிரத்துத் தொண்ணூற்று ஐம்பது ஆண்டுக் காலம் கடைச் சங்கம் விளங்கி நின்றது என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இறையனார் அகப்பொருள், சிலப்பதிகாரம் போன்ற பழைமை வாய்ந்த இலக்கியங்களை நீங்கள் பின்னாளில் தமிழாசிரியர்களுக்கு மதிப்புத் தந்து படித்துத் தெரிந்து கொள்ள முயலவேண்டும். அப்போது உங்களுக்கு வரலாறு மட்டுமல்ல, நமது பண்பும் நாகரிகமும் கூட, தெரியவரும்.

ஆயிரத்துத் தொண்ணூற்று ஐம்பது ஆண்டுக் காலத்தில் நாற்பத்து ஒன்பது மன்னர்கள் பாண்டிய நாட்டை ஆண்டனர். அவர்கள் அத்தனை பேர்களையும் என்னால் உங்களுக்குக் காட்ட முடியாவிட்டாலும். அறிந்த வரை அறிமுகப்படுத்துகிறேன்.

முடத்திருமாறன் என்பவர் நமக்கு முதலாவதாகக் கிடைக்கிறார்.

முதற் சங்க காலத்தில் பாண்டியர்களுக்குத் தலைநகரமாய் இருந்த முதற் கபாடபுரம், முதற்கடற்கோளால் (கோள் - தீமை) அழிவுற்றது.

இப்போது இருக்கும் கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு காலத்தில் நிலப்பரப்பு நீண்டிருந்தது. அந்த இடத்தில்தான் முதல் கபாடபுரம் சிறந்து விளங்கியது. அங்கேதான் நீங்கள் முன்னம் படித்த பஃறுளியாறும் வெட்டப்பட்டது.

இடைச்சங்க காலத்து இறுதியிலும், கடைச் சங்க காலத்துத் துவக்கத்திலும் ஆட்சி புரிந்தவர் இந்தத் திருமாறன். இடைச் சங்ககாலத்தில் தாம்பிரபரணியாற்றுக்குத் தெற்கே அமைந்த இரண்டாம் தலைநகருக்கும் கபாடபுரம் என்றே பெயர் வழங்கினர். அந்தக் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஐம்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் ஆண்டனர். அவர்களில் கடைசி மன்னர் இந்தத் திருமாற பாண்டியன்.

அப்போதும் தென்கடல் பொங்கியது! (இதைக் கூறுவதற்கே என்னுடைய நாக்கு நாணுகிறதே! என் செய்வேன்! உங்களுக்கு நான் இழைத்த துன்பம் ஏராளம்;)

திருமாறன் நொந்த மனத்துடன், சிறிது வடக்கு நோக்கி ஓடிவரலானார். ஆனால், அவருடைய காலம் வரையில் வளர்க்கப்பட்ட தமிழ் நூல்கள் பல அவருடன் ஓடிவர முடியாமல் போய்விட்டன. அவைகளைக் கடற்கன்னி தன்னுடைய அகண்ட வாயினுள் அடக்கிக்கொண்டாள். அப்படியும் சில நூல்கள் அவளிடம் போராடித் தப்பித்துக்கொண்டு, திருமாறனைத் தொடர்ந்தன. அவைகளினின்றுதான் இன்று உங்களை நாத்தழுதழுக்கப் பேச வைக்கிறது 'தொல்காப்பியம்!'

கடலால் துரத்தப்பட்ட திருமாறன் மணலூர் என்னும் சிற்றூரை அடைந்தார். அவர் பல தொல்லைகளுக்கிடையே தம்மைக் காத்துக்கொள்ள முயன்றதால் ஒரு காலை ஒடித்துக் கொண்டார். இதனால் முடத்திருமாறன் என்ற பட்டப்பெயரைத் தாங்க நேரிட்டது.

சிலநாட்கள் மணலூரிலேயே தங்கி ஓய்வெடுத்தார். தம்முடைய காலையும் குணப்படுத்திக் கொண்டார். பிறகே, வேறு தலைநகரம் தேடும் பணியில் இறங்கினார்.

அவருடைய தமிழ்க் கண்களில், மதுரை தென்பட்டது.

மதுரை அப்போது மிகச் சிறு நகரம்.

அந்தச் சிறு நகரத்தைப் பெருநகரமாக்க முயன்றார்; வெற்றியும் பெற்றார்.

மதுரை மாநகர் மூன்றாவது தலைநகரமானது. மூன்றாம் தமிழ்ச் சங்கமும் துவங்கப்பட்டது. மூன்று தமிழ் எனக் கருதப்படும் இயல், இசை, நாடகம் மூன்றும் வளர்க்கப்பட்டன.

இரண்டு தமிழ்த் தலைநகரங்கள் கபாடபுரம் என்ற பெயரில் விளங்கிய போது, மூன்றும் தலைநகரம்



மட்டும் ஏன் மதுரை என்றே வழங்கலாயிற்று என்ற ஐயம் உங்கள் இளம்நெஞ்சில் அருப்புகிற தல்லவா?

அரும்பவேண்டிய ஐயம்தான்! ஆனல், அந்த ஐயத்திற்கு இன்று வரை விடைதெரியாமல்தான் இருக்கநேரிட்டிருக்கிறது!

ஒன்று: மதியரையன் அல்லது மதுரையன் என்பவன் அப்பகுதியில் சிறந்த வேளாளுக இருந்திருக்க வேண்டும். ஓடிவந்த பாண்டிய மன்னருக்கு உதவி செய்து தலைநகர் உருவாக்கப் பாடுபட்டு இருக்க வேண்டும். அவன் பெயராலேயே, திருமாற பாண்டியன் நன்றிக் கடனுக்குத் தம்முடைய தலைநகரை அமைத்திருக்க வேண்டும்.

இரண்டு: இருமுறையும் கபாடபுரம் என்ற பெயரிட்டு, கடற்கோளால் பாதிக்கப் பட்டதால், அப்பெயரின்மீது வெறுப்புக் கொண்டு, எந்தச் சிற்றூர் தலைநகராக ஆக்கடபட்டதோ, அந்தச் சிற்றூரின பெயராலேயே வழங்க முன்வந்திருக்க வேண்டும்.

இவை இரண்டும் வெறும் ஊகம்தான்!

ஆனல், மதுரையைத் தலைநகராகக்கொண்ட முதற் பாண்டியன் மட்டும் திருமாறன் என்பதை இறையனர் தம்முடைய அகப்பொருள் நூலில் கூறிவிட்டார். இது மட்டுமா? திருமாற பாண்டியனே ஒரு கவஞர். நற்றிணை என்னும் தமிழ் நூலில் அவர் பாடிய இரண்டு பாடல்களை இன்றும் காணலாம்.

ஆகவே, இந்த உண்மையை நாம் அறிந்துகொள்வோம்:

''காலத்தால் ஆகாதெனினும் [கவிஞன்
சாலத்தால் ஆக்கப்படும்''—

(காலம்)



# தங்கையின் நடனம்

அழ. வள்ளியப்பா

'தைதை' என்றே ஆடுகின்றாள்
தங்கை மீனா ஜோராய் - என்
தங்கை மீனா ஜோராய் - அவள்
கையைக் காலை ஆட்டுகின்ற
காட்சி தன்னைப் பாராய் - அந்தக்
காட்சி தன்னைப் பாராய்!
கையில் புல்லாங் குழல்எடுத்துக்
கண்ணனைப்போல் வருவாள் - மாயக்
கண்ணனைப்போல் வருவாள்.
மையைக் கண்ணில் தீட்டிக்கொண்டு
மானைப் போலப் பார்ப்பாள் - புள்ளி
மானைப் போலப் பார்ப்பாள்!
தில்லை நட ராஜரைப்போல்
திருநடனம் புரிவாள் - சுற்றித்
திருநடனம் புரிவாள்.
எல்லை யில்லா மகிழ்வுடனே
எவரும் பார்க்கச் செய்வாள் - அதை
எவரும் பார்க்கச் செய்வாள்!
குறத்தி போலே உடையுடுத்திக்
கூடை யோடே வருவாள் - கையில்
கூடை யோடே வருவாள்.
குறியும் பார்த்து மனத்திலுள்ள
குறைகளெல்லாம் சொல்வாள் - நம்
குறைகளெல்லாம் சொல்வாள்.
ஜிப்ஸி நடனம், பாம்பாட்டி
தில்லானாவும் அறிவாள் - நல்ல
தில்லானாவும் அறிவாள்.
தப்பில் லாமல் தாளத்திற்குத்
தகுந்த படியே அசைவாள் - அவள்
தகுந்த படியே அசைவாள்!








## 23. நெடுமாறன் தவிப்பு

நெடுமாறனைத் தாக்க வந்த வேல் வீரன் அடிபட்ட வேகத்தில் அவன் கையிலிருந்த தீப்பந்தம் ஒரு புறமாகத் தண்ணீரில் வீழ்ந்து அவிந்து போயிற்று. மற்றொரு கையிலிருந்த கூரிய வேல் வேறு ஒருபுறமாகப் போய் விழுந்து மறைந்தது.

அதே சமயத்தில் வாளை ஓங்கியவாறு பாய்ந்து வந்த வீரனுடைய குறி, குறட்டில் இடறித் தவறி அவனும் கையிலிருந்த தீப்பந்தத்தோடு தண்ணீரில் தலை குப்புறப் போய் விழுந்தான். அவன் கையிலிருந்த வாள் தண்ணீரில் விழுந்தவன் வயிற்றில் பாய, செங்குத்தாக விழுந்த வேல் இவனுடைய உடலைக் குத்திக் கொண்டு போக, இருவருடைய பரிதாபகரமான நிலையையும் பார்க்க முடியாமல் செய்துவிட்டது அங்கே கப்பிக்கொண்ட இருள்.

எதிரொலி செய்த அடிக்குமிழி, 'கள-கள சள..சள.... கிளக்..கிளக்..' என்று வாயை மூடிக்கொண்டுவிட்டது. எங்கும் இருள்..ஒரே இருள்! ஒரே அமைதி!

நெடுமாறன் அதற்குமேல் நேரத்தை வீணாக்க விரும்பாமல் கையிலே உருவிய குத்து வாளுடன் படிகளில் பாய்ந்து ஏறினான். நாலே தாவலில் கோட்டையின் உட்புற முற்றத்தை அடைந்தான். முன் வாயிலில் போய் நிற்கும் வரையில் அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை.

அப்போதுதான் பாராக்காரர்கள் எல்லாரும் கையில் பந்தங்களும் ஆயுதங்களும் ஏந்தியவாறு அடிக்குமிழிக்குப் போகும் படிக்கட்டுகளில் இறங்கிக்கொண்டிருந்தார்கள். நெடுமாறன் இதைக் கண்டான். ஒரே நொடியில் அவன் கோட்டை அரண்மனையுள்ளே பாய்ந்தான். அங்கங்கே வெளிச்சத்துக்காகப் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் அவனோ இரு

ளடர்ந்த பகுதி வழியாக எச்சரிக்கையோடு ஓட்டமும் நடையுமாகச் சென்ருன்.

முன்புறக் கூடங்களிலும் அறைகளிலும் ஆள் நடமாட்டத்தையே காணும். அவன் அந்த நாட்டிய மண்டபம் எங்கேயிருக்கிறது என்று ஆராய்ந்துகொண்டே பல கூடங்களையும் வாயில்களையும் கடந்து சென்ருன். அந்தப் புராதனமான கோட்டை உறுதி வாய்ந்திருந்ததோடு மட்டுமல்ல; அழகான அமைப்பும் கொண்டிருந்ததைக் கண்டு அவன் மனம் ஒரு புறம் வியந்தது. ஒரு புறம் யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாதே என்கிற கவலை; மறுபுறம் வியப்பு. பல படிக்கட்டுகளையும் நிலவறைகளையும் தாண்டிச் சென்ற பிறகுதான் அந்த நாட்டிய மண்டபத்தை அவனுல் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அந்த மண்டபத்தை அடுததுத்தான் விருந்து மண்டபம் இருந்தது. அதன் கூடத்தை அடுத்துத்தான் அந்தப் பாதாளச் சிறைக்குப் போகும் வழி இருந்தது.

நெடுமாறன் அந்த வழியைத்தான் முன்பு பார்த்திருக்கிருனே! ஆகவே சுவரோடு சுவராக ஒண்டியவாறே, அங்கணத்துக்கு அங்கணம் பாய்ந்து முன்பு அந்த முரடன் சென்ற வழியை அடைந்தான். அவனுக்குத் தன் இதயத்தின் படபடப்பே பெரிதாகச் சத்தமிடுவதுபோல் ஒலித்தது. கால்கள் இரண்டும் கெஞ்சின. முதலையின் பல் பட்ட காயத்திலிருந்து கசிந்த ரத்தத்தை அவன் கவனிக்கவேயில்லை. அது அவன் போன இடமெல்லாம் பொட்டுப் பொட்டாக அடையாள மிட்டுக்கொண்டிருந்ததை, பாவம், அவன் அறியவேயில்லை.

அவன் அந்தப் பாதாளச் சிறையின் கதவுகளைக் கண்டான். இன்னும் நாலு பாய்ச்சலில் அந்த இடத்தை அடைந்துவிடுவான். அவன் முகத்திலே மகிழ்ச்சி மலர்ந்தது. காரணம் அந்தச் சிறையின் மர்மக் கதவுகள் இப்போது திறந்திருந்ததுதான். ஆனுல் பின்னுல் அது என்ன காலடி ஓசை!—

நெடுமாறன் சுற்றுமுற்றும் சட்டெனப் பார்த்தான். காலடி ஓசை வர வர வலுத்தது. பலருடைய காலடிகள் வருவதை அவன் செவிகள் தெளிவாக உணர்ந்தன. ஆனுல் அவன் அந்த இடத்தில் எங்கே ஒளிந்துகொள்வான்? அவசரத்தில் அவன் கண்கள் அந்த இடத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தன.

அந்த இருளிலே, பாதாளச் சிறைக்குச் செல்லும் படிக்கட்டுக்கு எதிரே ஏதோ பளபளப்பாகத் தெரிந்தது. அவனுடைய கூரிய கண்கள் அது ஒரு திரைச் சீலை என்பதை உணர்ந்துகொண்டுவிட்டன. அது சுவரோடு சுவராகத் தரையில் படும் அளவுக்குத் தொங்கிக்கொண்டிருந்தது.

காலடி ஓசை கடுகி வருவதற்குள் நெடுமாறன் சரேலென்று அதனருகில் நெருங்கினுன். அவன் எண்ணியது சரியாகப் போயிற்று. அது மற்ருேர் அங்கணத்துக்குச் செல்லும் பாதையை மறைப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த திரை. அவன் அதனுள் பாய்ந்து, வெளியே வருபவர்களுக்குத் தெரியாதவாறு அந்தத் திரையைத் தன்மீது சுருட்டிக்கொண்டான்.

''இதோ, ரத்தம் சொட்டியிருக்கிறது; இதோ, இந்தப் பக்கம்தான் திரும்பி வந்திருக்கிறான்! எதற்கும் ஆயுதச் சாலைப் பக்கமாக நாலு பேர் போய் வரட்டும்!'' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே ஏழெட்டுப் பேர் அவன் ஒளிந்துகொண்டிருந்த பக்கமாக வந்தார்கள்.

நெடுமாறனுக்குத் திக்கென்றது. அப்போதுதான் அவனுக்குத் தன் காலில் முதலையின் பல் குத்திய காயத்தின் சொரணை உண்டாயிற்று. அது வரையில் அவன் அதைப் பொருட்படுத்தவேயில்லை. அந்தக் காயத்திலிருந்து கசிந்து சொட்டிய ரத்தத்தைக்கொண்டே, தன்னைக் கண்டுபிடித்துவிடப் போகிறார்களே என்று அவன் நெஞ்சு படபடத்தது.

அவர்கள் தன்னைப் பிடித்துவிடுவது இனி நிச்சயம் என்று அவன் முடிவு கட்டிவிட்டான். அப்படி நேர்ந்தால் அதைத் துரதிருஷ்டம் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன என்று எண்ணுவது? இவ்வளவு பிரயாசைப்பட்டு, இத்தனை தூரம் வந்துவிட்ட பிறகு, தன் காலில் பட்ட காயமே தன்னைக் காட்டிக் கொடுக்கக் காரணமாக இருந்தால், அவனுக்கு அது பெரிய வருத்தத்தையும் ஏக்கத்தையும் கொடுத்தது.

ஆனால் அவன் ஒளிந்துகொண்டிருந்த இடத்துக்கு அருகில் வந்தவர்கள் அங்கேயே தயங்கி நின்றுகொண்டிருப்பதாகத் தெரிந்தது. அவன் பாய்ந்த வேகத்தில் அவனுடைய காலிலிருந்து பெருகிச் சொட்டிய ரத்தத்தின் கறை தரையிலேயே படவில்லை. அந்த இடத்துக்குமேல் அவன் எந்தப் பக்கமாகப் போயிருக்கக்கூடும் என்பதை அந்த வீரர்களால் கண்டறிய முடியவில்லை. அது அவர்களுடைய பேச்சிலிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

''எதற்கும் பாதாளச் சிறைப் பக்கமாக ஒருவன் போய்ப் பார்த்துவிட்டு வந்து இங்கேயே நிற்கட்டும். மற்றவர்கள் உக்கிராணத்துக்குச் செல்லும் பாதையில் போய்ப் பார்க்கலாம்!'' என்று கூறினான் அவர்களில் ஒருவன்.

அதேபோல ஒருவனைத் தவிர மற்றவர்கள் அந்த வழியே திரும்பிச் செல்வது அவர்களுடைய காலடி ஓசையிலிருந்தே தெரிந்தது. அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவன் திரையைச் சிறிது விலக்கி மெதுவாக எட்டிப் பார்த்தான். நல்ல காலம்! அவனுக்கு வெகு அருகிலேயே ஒரு வீரன்! கையிலே ஈட்டியை ஏந்தியவாறு அவன் நின்றுகொண்டிருப்பதை நெடுமாறன் பார்த்துவிட்டான். சட்டென்று தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு அவன் மேலும் சிறிது நேரம் பொறுத்திருந்தான். அந்த வீரன் பாதாளச் சிறைக்குள் போகத் துணியாமல் அதன் கதவுகளை மட்டும் இழுத்து மூடிக்கொண்டு, கதவுக்கருகிலேயே உஷாராக நின்றுகொண்டிருந்தான். உள் பக்கம் காலடியோசை ஏதாவது கேட்கிறதா என்று அவன் உற்றுக் கேட்பது போல் நின்றதை மீண்டும் எட்டிப் பார்த்துத் தெரிந்துகொண்ட நெடுமாறன் வேறு யோசனையில் இறங்கினான். திரைச் சீலையைச் சுருட்டிக்கொண்டு நிற்பது அவனுக்குப் பெரிய சோதனையாக இருந்தது. மூச்சே விட முடியவில்லை.

ஆகவே அவன் திரைச் சீலையைவிட்டுத் துணிந்து வெளியில் வந்து நின்ருன். ஈட்டியும் எஃகுக் கவசங்களும் அணிந்திருந்த அந்த வீரன் அவனைக் கவனிக்கவில்லை. முன்பு உக்கிராணத்துக் காவற்காரனுக்குச் செய்த மரியாதையை இவனுக்கும் செய்வது என்று முடிவு செய்துகொண்டு, அடுத்த கணமே சிறிதும் தயங்காமல் திரைச் சீலையின் ஒரு பகுதியை உருவி இழுத்துக் கையில் எடுத்துக்கொண்டான். மேல் புறம் முடியப் பட்டிருந்த அந்தக் கனத்தத் திரைச் சீலை அறுந்து அவன் கைக்கு வரும்போது உண்டான ஓசையில் அந்த ஈட்டி வீரன் சட்டென்று திரும்பிப் பார்த்துவிட்டான்.

இனி என்ன செய்வது? அவன் நெடுமாறனைப் பார்த்து அவன்மீது பாய்வதற்குள் மிகவும் சாதுரியமாக அந்த ஈட்டி முனையில் படாதவாறு நெடுமாறன் அவன முகத்திலே உருவியத் திரைச் சீலையைப் போட்டு மூடிவிட்டான்.

''ஆ—திருடன்—!'' என்று அவன் கத்துவதற்குள், அந்தச் சத்தம் வெளியே கேட்காதவாறு அந்தத் திரைச் சீலையாலேயே அவனைச் சுருட்டிப் பிணைத்து விட்



டான் நெடுமாறன். அதற்கு மேல் அவசர அவசரமாக எப்படியோ அவனுடைய தலைக் கவசத்தையும் மார்புக் கவசத்தையும் கழற்றிக்கொண்டு அவனை அசைய முடியாத விதத்தில் கட்டி, அந்தத் திரைச் சீலைக்குப் பின்னால் மறைவாக உருட்டி விட்டான். இதற்கெல்லாம் அவனுக்கு நேரம் அதிகம் பிடிக்கவில்லை. சில விநாடிகளில் யாவும் முடிந்தன. அடுத்த சில விநாடிகளில் அவன் கட்டிளமை வாய்ந்த உடலைக் கவசங்கள் மூடி மறைத்தன. இரும்புக் கவசத்தைத் தலையில் அணிந்து கொண்ட பிறகு அவனை அந்நியன் என்றே எவராலும் கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது. அவன் தன்னைத்தானே ஒரு முறை திருப்தியோடு பார்த்துக்கொண்டான். அந்த வீரனுடைய ஆடைகள் அவனுக்கு அத்தனை பொருத்தமாக அளவோடு இருந்தன. அதுவும் அந்த இருளில் தன்னைப் பிறரால் அடையாளம் கண்டுகொள்ள முடியாது என்று அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.



இதைப் பரிசோதித்துப் பார்ப்பதுபோல, வேறு வழியாகத் தேடச் சென்ற நாலைந்து வீரர்கள் அவன் நின்ற நிலவறைப் பாதையை நோக்கித் திரும்பி வந்தார்கள். அவர்களைக் கண்டானோ இல்லையோ, நெடுமாறன் அங்கும் இங்குமாய்த் தேடிப் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்யத் தொடங்கினான். அவன் அதை அளவுக்கு மீறிச் செய்யாமல் இருந்திருக்கக் கூடாதா? பேசாமல் பாதாளச் சிறை வாயிலில் விறைப்பாக நின்றுகொண் டிருந்தாலே அவனை யாரும் சந்தேகப்பட மாட்

டார்கள். ஆனால் அவனே திரும்பி வருகின்ற வீரர்கள் தன்மீது சந்தேகம்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நில வறையை எட்டிப் பார்ப்பதும், திரைச் சீலையைத் தள்ளிப் பார்ப்பதும், பாதாளச் சிறையைக் கூர்ந்து பார்ப்பதுமாகப் பாவனைகள் செய்யத் தொடங்கினான். அத்துடனாவது நின்றிருக்கலாம். அதுவும் இல்லை. அப்போதுதான் அவன் கண்களில் நிலவறையை அடுத்து ஒரு கதவு இருப்பது தெரிந்தது. அதைத் திறக்கப் போய்விட்டான்

''டேய்!'' என்று ஓர் அதிகாரக் குரல் அவன் செய்கையைக் கண்டிப்பதுபோல் உறுமியது.

அதற்குள் நெடுமாறனின் கைகள் கதவைத் தள்ளிவிட்டு விட்டதால் கதவிலே உட்புறம் தொங்கிய கிண்கிணி மணிகள் கணகணவென்று பெரிதாக ஒலிக்கத் தொடங்கிவிட்டன. அந்த மணிச் சத்தமும் அதிகாரக் குரலும் கேட்டு நெடுமாறன் சிறிது கலங்கிவிட்டான்.

அடுத்த கணமே அவனுடைய கழுத்தை ஓர் இரும்புக் கை உறுதியாகப் பற்றியது இரண்டு கொடூர விழிகள் அவன் கண்களைத் துளைப்பதுபோலப் பார்த்தன. இவ்வாறு அந்த நான்கு கண்மணிகளும் அசையாது நிலைத்து விரிந்தன.

''வேங்கையாரின் அந்தரங்க மாளிகையின் அந்தப்புரக் கதவைத் தொட உனக்கு எத்தனை நெஞ்சுத் துணிச்சல்?'' என்றான் அவன் - கழுத்தைப் பற்றிய வீரன்.

நெடுமாறனுக்கு வெலவெலத்துப் போய்விட்டது. சேனைத் தலைவன் சிங்கராயனிடம் இத்தனை எளிதாக அகப்பட்டுக் கொண்டு விழிப்போம் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. புலிக் கண் படைத்த சிங்கராயன் நெடுமாறனுடைய கரிய விழிகள் இரண்டையும் நன்றாகத் தெரிந்துகொண்டுவிட்டான். பின்னல், ''டேய், இரு இரு..யார் நீ?'' என்று திரும்ப இருந்த அவன், நெடுமாறன் கைகளைப் பாய்ந்து பிடித்துக்கொண்டு வினவினான்.

நெடுமாறன் விடை கூற முடியாமல் விழிப்பதைக் கண்டு, ''நீ என்ன, அரண்மனை வீரனா அல்லது நாகர்கள் வீரனா? உண்மையைச் சொல்லிவிடு!'' என்று முதலில் மெதுவாகக் கேட்டான்.

''நான்..நான்..ஒரு..வீ..வீ..''

''உன் பெயர் என்ன?''

சிங்கராயன் அவன் கைகளை முரட்டுத்தனமாகக் குலுக்கியவாறு கேட்டான்.

''என் பெயர்..என் பெயர்..''

''உன் பெயரை நீ சொல்ல வேண்டாம்; ஆனால் நான் சொல்லட்டுமா? நெடுமாறன்! இல்லையா? நெடுமாறன்தானே உன் பெயர்? அதாவது அன்று வில் வித்தைப் போட்டியில் கலந்துகொண்டு பாதியில் ஓடியவன்தானே?'' என்றான் சிங்கராயன்.

நெடுமாறன் வேறு வழி ஒன்றும் தோன்றாததால் அவனிடம் உண்மையைச் சொல்வதா, அல்லது அடியோடு மௌனம் சாதித்துவிடுவதா என்பது புரியாமல் மலைத்து நின்றான்.

(தொடரும்)

# கதை கேட்டான்




க. பஞ்சாபகேசன்

ரெயில் 'கூ' வென்று அலறி விட்டு, குருணிப் புகையையும் அள்ளி விட்டுக்கொண்டு புறப்பட்டது.

உயர் வகுப்புப் பெட்டி; அதிலும் பெண்கள் பெட்டி. தன் செல்வச் சிறுவனுக்குக் குளிர்க் காற்று அடிக்கப் போகிறதே என்பதற்காக, அந்தத் தாயார் ஜன்னலின் கண்ணாடி மூடியை இழுத்துச் சாத்தினாள்.

மின்சார விசிறியைக் கிர்ரென்று சுழலவிட்டாள். இருளைக் கிழித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது ரெயில். இரவு மணி ஒன்பதரை ஆகிவிட்டது.

பாலன் இன்னும் தூங்காமல் மெத் தென்றிருந்த மெத்தையில் கொட்டக் கொட்டக் கண் விழித்திருந்தான். அவன் அருகில் அமர்ந்த வண்ணம், மெதுவாகத் தட்டிக்கொண்டு தூங்கப் பண்ண முயன்றுகொண் டிருந்தாள் பாலனின் அம்மா பார்வதி. அவளால் முடியவில்லை.

அந்த உயர் வகுப்பில் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாருமில்லை.

''அம்மா . . .'' என்றான் பாலன் மெதுவாக.

''ஏண்டா கண்ணு?'' என்று கேட்டாள் பார்வதி.

''இவ்வளவு இடம் இங்கே காலியாக இருக்கே, அம்மா, இன்றைக்கு யாருமே அவங்கவங்க ஊருக்குப் போகலையா?''

''இது உயர் வகுப்புப் பெட்டி. அதிகக் காசு கொடுத்தால்தான் இதில் ஏற முடியும். அதிலும் இது பெண்கள் வகுப்புப் பெட்டிடா, கண்ணு!''

''ஏம்மா, நான் ஆண்பிள்ளையாச்சே! நான் மாத்திரம் இதில் வரலாமா?''

பார்வதி சிரித்துக்கொண்டே, ''நீ சின்னப் பிள்ளை. ஆறேழு வயசுதானே ஆகிறது உனக்கு?.. சரி, தூங்கு, பாலா! விடியற்காலையில் திருச்சிராப்பள்ளிக்குப் போய் விடுவோம். . . .'' என்றாள்.

பாலன் தூங்குவதாயில்லை. ''அம்மா, நாம் அதிகக் காசு கொடுத்து இந்த உயர்ந்த வகுப்பில் ஏறியிருக்கோமா? அப்பாவிடம் அவ்வளவு நிறைய காசு இருக்கிறதா?''

''அப்பா உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார்டா, கண்ணு! நமக்கு உயர் வகுப்புக்குப் 'பாஸ்' உண்டு. . . . நாம் 'பாஸி'ல் போகிறோம். . .''

''அப்போ, இதில் நாம் காசு கொடுத்து வரலை? . . .''

''நீ தூங்க மாட்டாயா, பாலா? விடியற்காலை திருச்சியில் அப்பா நம்மை ஸ்டேஷனில் வந்து சந்திப்பார். அவரிடம் இந்தக் கேள்வியை யெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்.''

பாவம், பார்வதிக்கு நன்றாகத் தூக்கம் வந்தது. வீட்டில் இந்தப் பாலனை வேலைக்காரக் கிழவியிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் ஹாய்யாகப் படுத்துத் தூங்கிப் பழக்கம் அவளுக்கு. திருச்சியிலிருந்து

சென்னைக்கு ஓர் உறவினர் கல்யாணத்துக்கு வந்துவிட்டுத் திரும்பிப் போகிறார்கள் அவர்கள்.




திருச்சியில் தன் வீட்டை அடைந்ததும் முதல் காரியமாகப் பாலனை வேலைக்காரக் கிழவியின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டுத் தான் மறு காரியம் என்று எண்ணி அலுத்துக்கொண்டாள் அவள். செல்வத்திலே, பிறந்து, செல்வக் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவள் அவள்; குழந்தையின் கேள்விகள் அவள் பொறுமையைச் சோதித்தன.

பாலனுக்குத் தூக்கம் வந்தால் தானே?

“அம்மா, ஒரு கதை சொல்லு...”

“கதையாவது கிதையாவது? பேசாமல் தூங்குடா!..” என்றாள் பார்வதி, கொட்டாவி விட்டுக்கொண்டே.

ரெயில் அப்போதுதான் சென்னையை விட்டுப் புறப்பட்டிருந்தது. இன்னும் தாம்பரத்தைக்கூட அடையவில்லை. அதற்குள் எத்தனை வேகம் அதற்கு?

“ரொம்ப ‘ஸ்பீடாக’ப் போகிறான்!” என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டான் பாலன். இரண்டு நிமிஷம் ஆயிற்று. அருகில் படுத்திருந்த அம்மா நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டதைக் கவனித்தான்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். அம்மாவை எழுப்பப் பாலனுக்குத் தைரியமில்லை. முன்பு ஒருமுறை தூங்கிக்கொண்டிருந்த அவள்மீது ‘தொப்’ பென்று அன்பாகப் போய் விழுந்தான் பாலன். அலறிப் புடைத்துக்கொண்டு விழித்துக்கொண்ட பார்வதி அவனைச் சாத்திய சாத்து இன்னும் மறக்கவில்லையே!



பசித்தாற் போலிருந்தது பாலனுக்கு. பெஞ்சிக்கு அடியில் பழக் கூடையிலிருந்து, அருமையான ஆப்பிள் பழங்களின் வாசனை அவன் மூக்கைத் துளைத்தது; ஓரத்தில் வைத்திருந்த பெரிய பலாப்பழம் வேறே அவன் கண்ணை உறுத்திற்று.

பலாப் பழத்தை அப்போதைக்குச் சாப்பிட முடியாது. ஆனால் ஆப்பிள் பழத்தை ஏன் விடவேண்டும்?

போர்வையை உதறிவிட்டுப் பெஞ்சியிலிருந்து மெதுவாக இறங்கினான் பாலன்.

பெஞ்சிக்கு அடியில் குனிந்து கூடையில் கைவிடப் போன போது—

அங்கே அவன் கண்டதென்ன?

பெஞ்சிக்கு அடியில், கூடைக் கருகில் ஒரு பையன் உட்கார்ந்திருந்தான்! பாலனைவிடக் கொஞ்சம் வயசில் பெரியவனாக இருப்பான். அவ்வளவுதான். நல்ல சுருளான தலைமயிர்; அதை அவன் வாரவே இல்லை. சினிமாக்களில் வருவதைப்போல 'ரௌடி' பனியன் போட்டுக்கொண்டிருந்தான்....வயது பத்து இருக்கும்....

அவனைக் கண்டதும் மகிழ்ச்சி கொண்டான் பாலன்.

''ஏன் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கே? வெளியே வா!....'' என்றான் பாலன்.

''உஷ்!..'' என்று அந்தப் பையன் உதட்டில் கை பொருத்திச் சொல்லிவிட்டு, மெதுவாக 'சீட்'டுக்கு வெளியே வந்தான். பாலனின் கையைப் பிடித்துக்கொண்டு, பெஞ்சியின் மறு கோடிக்கு - பார்வதியிடமிருந்து விலகிச் சென்றான்.

இருவரும் எதிர்ப் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''உன் பேர் என்ன?'' பாலன் அவனைக் கேட்டான்.

''என் பேர் வினோத். உன் பேர்?''

''பாலன். அது சரி, நீ எப்போ வண்டியிலே ஏறினே?''

''ஏய் பாலா, சத்தம் போட்டுப் பேசாதே! உங்கம்மா எழுந்திருக்கப் போறாங்க!''

''எங்கம்மா இனிமே விடிகாலம் தான் எழுந்திருப்பாங்க. எனக்கப்புறம்தான் எங்கம்மா காலையில் எழுந்திருக்கிற பழக்கம்.''

வினோத் சொன்னான்: ''நான் ராத்திரியும் நேரம் கழித்துத் தூங்கப் போவேன்; விடியற்காலமும் சுருக்க எழுந்திருந்துவிடுவேன்.

''அப்படியானால் நீ ரொம்ப கெட்டிக்காரன், வினோத்! அது சரி, எதற்காக இப்படி அழுக்குச் சட்டை போட்டுக்கொண்டிருக்கிறே? தலையிலே எண்ணெயை வைச்சுச் சீவிக்கலையா?''

''அவசரத்தில் புறப்பட்டுவிட்டேன், பாலா! கொஞ்சம் எண்ணெய், சீப்பு, கண்ணாடி தர்றியா?

''இதோ'' என்று சொல்லிக்கொண்டே பாலன், சிறிய தோல் பெட்டியை எடுத்து வந்து, வினோத்திடம் தந்தான். பல நாள் எண்ணெய் காணாத தலை! ஹேர் ஆயிலையே வினோத் தன் தலையில் கொட்டிக் கவிழ்த்துக்கொண்டுவிட்டு, மறுபடியும் அவற்றையெல்லாம் தோல் பையில் போட்டு மூடி, பக்கத்தில் வைத்தான்.

''இப்போ அழகாயிருக்கா, பாலா?''

''நல்லாயிருக்கே! சரி, வினோத்! உனக்குக் கதை சொல்லத் தெரியுமா?''

வினோத் பாலனை ஆச்சரியத்துடன் பார்த்தான். அடுத்த விநாடி, வண்டி ஏதோவொரு ஸ்டேஷனைத் தாண்டிக்கொண்டிருக்கவும், ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். குரோம்பேட்டை ஸ்டேஷனைத் தாண்டிக்கொண்டிருந்தது. அடுத்தது தாம்பரம். அங்கே அவன் இறங்கி விடவேண்டும்; இல்லாவிட்டால், பார்வதி விழித்துக்கொண்டு விட்டால்? அதற்குள்...

''ஏன் சும்மா இருக்கே வினோத்! எனக்கு ஒரு கதை சொல்லு. அப்போதான் தூக்கம்வரும்.''

''பாலா! முதலில் எனக்குப் பசிக்கிறது. அடுத்த ஸ்டேஷனில் இறங்கி ஏதாவது சாப்பிட்டுவிட்டு வருகிறேன்... அப்புறம் கதை...''

''பசிக்குதா? இதோ!'' பாலன் எழுந்து சென்று, இரண்டு ஆப்பிள் பழங்களை எடுத்து வந்தான். ஒன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு மற்றொன்றை வினோத்திடம் நீட்டினான். ''சாப்பிடு'' என்றான்.

நல்ல உயர்ந்த ஜாதி ஆப்பிள் பழம் அது! அரை நிமிஷத்தில் வினோத்தின் பல்லில் அரைபட்டுக் கரைந்து போயிற்று.

'கட கட கட'

வண்டியின் வேகம் மெதுவாகக் குறைந்து வந்துகொண்டிருந்தது. தாம்பரம் ஸ்டேஷன் நெருங்கி விட்டது.

வினோத் பரபரத்தான். அவன் எதைச் செய்ய வேண்டும்? பாலனின் பால் வடியும் முகத்தைப் பார்த்தான்! இரவில் தூக்கம் வருவதற்காக, ஒரே ஒரு கதைக்காக ஏங்கி நின்ற அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தான். கையில் பாதி கடித்த ஆப்பிளும் கையுமாகப் பாலனின் ஆர்வ விழிகள் 'கதை என்று நாலு வார்த்தை எப்போது தன் வாயிலிருந்து வரும்' என்று உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதையும் கவனித்தான்.

தாம்பரம் பிளாட்பாரத்துக்குள் ரெயில் வண்டி புகுந்துகொண்டிருந்தது. இருப்பிடத்திலிருந்து வேகமாக எழுந்தான் வினோத். ''ஸ்டேஷன் வந்து விட்டது, பாலா! இதோ நிமிஷத்தில் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வந்து உனக்குக் கதை சொல்கிறேன்'' என்றான் வினோத்.

வண்டி நின்றது. 'சடாரென்று' இறங்கிக் கதவைப் பூட்டிக்கொண்டு சென்று விட்டான் வினோத்.

வண்டி மறுபடியும் புறப்பட்டது. பாலன் ஆச்சரியத்தோடு மறுபடியும் குனிந்து பெஞ்சிக்கடியில் பார்த்தான். எங்கே தனது நண்பன் மறுபடியும் அங்கே மாயமாய் வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறனோ வென்று. காத்திருந்து பார்த்தான், நண்பன் கதை சொல்ல வருவான் என்று. அப்படியே பெஞ்சி மெத்தையில் படுத்துத் தூங்கிப் போய்விட்டான்.

விடியற்காலையில் திருச்சியில், பாலனின் தந்தை அவன் கன்னத்தைப் பிடித்து ஆசையாகக் கிள்ளினர். பாலன் சொன்னன்:

''அப்பா! அம்மா கதை சொல்ல மாட்டேன்னு சொல்லிவிட்டாள்; ஒரு பையன் வந்து ரெயிலில் கதை சொல்றேன்னு சொல்லிவிட்டு அவனும் இறங்கிப் போய்விட்டான்.''

குழந்தை தான் கண்டிருக்கக் கூடிய சொப்பனத்தை எவ்வளவு அழகாகச் சொல்லுகிறன் என்று பார்வதியும் அவள் கணவனும் மகிழ்ந்தார்கள்.

ஆனல் பாலன் அவனுடைய நிர்மலமான உள்ளத்தோடு அளித்த அந்த ஓர் ஆப்பிள் பழம், வினேத்துக்கு எவ்வளவு அருமையான படிப்பினை நிறைந்த கதையைச் சொல்லிவிட்டது என்பது அவர்கள் யாருக்கும் தெரியாது!

தாம்பரத்தில் வினேத் வண்டியிலிருந்து இறங்கியபோது, முதல் காரியமாக ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நல்ல படிப்புப் படித்து, பெரிய உத்தியோகம் வகித்து, இப்படி உயர் வகுப்பில் உரிமையுடன் சென்று, சிறந்த ஆப்பிள் பழமாகச் சாப்பிட வேண்டும் என்றல்லவா வைராக்கியம் கொண்டான்! ..

---

# கண்டு பிடித்துவிட்டார்!

அது ஓர் அரசியல் கூட்டம். அண்ணுசாமி பேசிக்கொண்டிருந்தார். அண்ணுசாமி, சாதாரணமானவரல்ல; ஒரு கட்சித் தலைவர். அவர் பேசுகிருரென்றல், அது ஒரு மாபெரும் கூட்டமென்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவு பேச்சுத் திறமையும், செல்வாக்கும் பெற்றவர்.

அத்தகையப் பெருமைக்குரியவர், ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒரு நபர், அண்ணுசாமியை மட்டந் தட்ட விரும்பினர்.

எனவே, அவர் கூட்டத்தினின்று எழுந்து, ''அண்ணுசாமி அவர்களே! எதைப்பற்றியெல்லாமோ கூறுகிறீர்களே - உங்கள் தாத்தா எருமை மாட்டு வண்டியோட்டி என்பதை மட்டும் ஏன் சொல்லாமல் மறைத்தீர்கள்?'' என்றர்.

வேறு யாராவதாக இருந்திருந்தால், 'நம் செல்வாக்கென்ன? திறமையென்ன? இவ்வளவு பேருக்கு மத்தியில் நம்மை ஒருவன் கேவலமாகப் பேசுவதா?' என்று ஆத்திரப்பட்டிருப்பார். ஆனல், அண்ணுசாமி பொறுமைசாலி. எனவே, கோபப்படவில்லை. பொருமைசாலிக்குத் தானே திறமையும் இருக்கும்!

சிரித்துக்கொண்டே கூறினர்: ''அன்பிற்குரியவர்களே! என் தாத்தாவின் வண்டி எங்கோ சென்றுவிட்டது; ஆனல் எருமை மட்டும் இதோ இந்தக் கூட்டத்தில் உயிரோடு இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டேன்!'' என்றர் அமைதியாக.

கூட்டத்தில் சிரிப்பொலி அதிர்ந்தது!

—ப. கி. மூர்த்தி.



# காணோம்

எம். பி. ராஜன்

என் மகன் கண்ணனை மூன்று நாட்களாகக் காணவில்லை, வயது பதினறு; வளைந்த மூக்கு; சிவந்த மேனி; ஒல்லியான உடல். அவனைப்பற்றித் தகவல் தெரிவித்தால் இருநூறு ரூபாய்ச் சம்மானம் அளிக்கப்படும்.

கருணாகரன்,
2. புது வீதி,
கடலூர்.

* * *

சென்னை,
1-7-58.

கனம் கருணாகரன் அவர்களுக்கு,

வணக்கம். கண்டேன்! கண்டேன், தங்கள் மகனைக் 'காணோம்' என்ற விளம்பரத்தைப் பத்திரிகையில்! உங்கள் மகன் சந்திரமண்டலத்திலிருந்தாலும் சமுத்திரத்தில் புகுந்திருந்தாலும் கண்டே பிடிப்பேன். உங்கள் மகனைக் காணும் வரையில் தேடும் என் முயற்சியை விடேன், விடேன்! இருநூறு ரூபாய் வெகுமதியைப் பெறுமல் இரேன், இரேன்!

துப்பறியும் சிங்கம்.

என்னைப்பற்றி:—முன்பு கன்னியா குமரியில் இரண்டு காலும் இல்லாத பையன் காணுமல் போய்விட்டான். அவனை, சென்னை மௌண்ட் ரோடில் அவன் நடந்துகொண்டிருக்கும் பொழுது நான்தான் கண்டுபிடித்தேன். ஏதோ அளப்பதாக எண்ண வேண்டாம். அசல் உண்மை, உண்மை! நான் மளிகைக் கடையில் அளக்கும் தொழிலை விட்டுவிட்டு துப்பறியும் தொழிலில் இறங்கி இருக்கிறேன்.

குறிப்பு:—கொஞ்சம் பணம் அனுப்பிவையுங்கள். பையனுடைய போட்டோவையும் அனுப்புங்கள். து. சி.

* * *

கடலூர்,
2-7-58.

ஐயா சிங்கமே!

கண்டு பிடியும்; கண்டு பிடியும்! என் மகனை உடனே கண்டுபிடியும். எனக்கு ஒரே பிள்ளை, ஐயா! பிள்ளையை இழந்துத் தவிக்கிறேன். என் மகனைச் சிறு வயதில் எடுத்த போட்டோதான் இருக்கிறது. அனுப்பி இருக்கிறேன். பணத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்; இப்பொழுது அதற்கு என்ன ஐயா அவசரம்?

கருணாகரன்.

பி. கு:- கன்னியாகுமரியில் தொலைந்த கால் இல்லாத பையன் சென்னை வந்து நடந்தபொழுது நீர் கண்டுபிடித்தது உலக அதிசயங்களில் ஒன்றுதான்! க. க.

* * *

சென்னை,
3-7-58.

திரு கருணாகரன் அவர்களுக்கு,

வணக்கம். தங்களுடைய நான்கு மகன்களையும் கண்டுபிடித்துவிட்டேன். நால்வரையும் தங்கள்

விலாசத்திற்கு அனுப்பி இருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்ட அங்க அடையாளப் பொருத்தம் எல்லாம் சரியாக இருக்கின்றன. மற்றவர்களுடைய முகஜாடை சகோதரர்கள் என்பதைக் காட்டுகிறது, பார்த்தீர்களா? தங்களுடைய மற்ற மூன்றுபையன்களும் முன்னமே காணமல் போய் இருக்க வேண்டும். நீங்கள் அவர்களைத் தேடிப் பார்த்துச் சலித்துப் போய்ப் பேசாதிருந்திருப்பீர்கள். நான் அவர்களையும் சேர்த்துக் கண்டு பிடித்துவிட்டேன். எப்படி என் துப்பறியும் திறமை?

1 மகனைக் கண்டுபிடித்ததற்கு = ரூ. 200.

4 மகனைக் கண்டுபிடித்ததற்கு = 200×4=800.

துப்பறியும் சிங்கம்.

பி. கு:- ரூபாய் எண்ணூறையும் செக்காகக்கூட அனுப்பலாம். என்னைப் பற்றி யாரிடமும் பெருமையாகப் பேசாதீர்கள். நான் பெருமையை விரும்பாதவன். து. சி.

* * *

கடலூர்,
4-7-58.

துப்பறியும் சிங்கமே,

அப்பப்பா! உமது திறமையே திறமை! தெருவோடு போகிற நாலு பேரை என் மகன்கள் என்று என் சொத்துக்கு வாரிசாக அனுப்பிவிட்டீரே! உமக்கு மூளை கீளை இருக்கா? சிங்கமே! துப்பறியும் தொழிலுக்கே மானபங்கம் செய்கிறீரே! உடனே ஓடும்; ஓடும்! இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுவிட்டு எங்கேயாவது காணமல் போய்விடும். க. க.

* * *

சென்னை,
5-7-58.

கருணாகரரே!

ஐயோ, மன்னியுங்கள், மன்னியுங்கள்! கோபிக்காதீர்கள். யாருக்கோ அனுப்பவேண்டிய மகன்களை உங்களுக்கு அனுப்பிவிட்டேன் மறதியாக.



நல்ல செய்தி! உங்கள் மகனை நேற்றுக் கடற்கரையில் சந்தித்தேன். அவனேதான் உங்கள் மகன். நீங்கள் குறிப்பிட்ட அங்க அடையாளங்கள் எல்லாம் சரியாகப் பொருந்தி இருக்கின்றன. தன்னுடைய தந்தையின் பெயர் கருணாகரன் என்றுகூடச் சொன்ஞன் அவன்.

'நீ எதற்காக வீட்டைவிட்டுக் கிளம்பினுய்?' என்று அவனிடம் கேட்டேன்.

'நான் இந்த விடுமுறையில் அஜந்தா, எல்லோரா, பம்பாய் முதலிய ஊர்களுக்குச் சுற்றுப்பயணம் செய்வதற்காக என் தந்தையிடம் பணம் கேட்டேன். என் கருமித் தந்தை கருணாகரன் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். அதனால் மனத்தாங்கல் ஏற்பட்டு வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டேன்!' என்ருன்.

இந்த விஷயம் உண்மைதானே? அவன் உங்கள் மகன் என்பது நிச்சயந்தானே?எப்படி இந்தச் சிங்கத்தின் திறமை? ஞாபகம் இருக்கட்டும்; ரூபாய் இருநூறு....

துப்பறியும் சிங்கம்.

* * *

கடலூர்,
6-7-58.

சிங்கம், சிங்கம்!

அவனேதான்; அவனேதான் என் மகன்! சுற்றுப் பயணத்திற்குப் பணம் கொடுக்காததால்தான் வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டான். எல்லாம் உண்மை, உண்மை. உடனே அவனைப் பிடித்துக்கொள்ளும். கோட்டை விட்டுவிடாதீர். கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். பணத்தைப்பற்றிப் பின்னல் கவனிக்கிறேன். மற்ற விவரங்களுக்கு உடனே பதில், பதில்.

கருணு.

* * *

சென்னை,
6-7-58.

டேய் அம்பலம்!

நம்பலாமா, உன் நாடகத் திட்டத்தை? என் தந்தையிடமிருந்து எப்படியாவது பணத்தை வாங்கி விடுவதாகச் சொல்லி என்னை உன் மாமா வீட்டிற்குக் கொண்டுவந்து ஒளித்து வைத்துவிட்டாய். இன்னும் எத்தனை நாளைக்கு உன் மாமா வீட்டில் நான் முடங்கி இருப்பது? நீ எத்தனை நாளைக்குத் துப்பறியும் சிங்கமாக நடிக்கப் போகிருய்? என் தந்தை கருணுகரர் பணத்தைக் கறப்பார்போல் தோன்றுகிறதா? நம்முடைய சூழ்ச்சி நாடகம் வெற்றி பெற்றுச் சுற்றுப்பயணம் போக வழி உண்டா?

கண்ணன்.

* * *

சென்னை,
7-7-58.

கண்ணு! கண்ணு!

அவசரப்படாதே; இன்னும் சில நாள் பொறுத்துக்கொள். இந்தச் சிங்கத்திடம் எப்படியும் உன் தந்தை பணத்தைக் கோட்டை விடப் போகிருர். பார்த்துக் கொண்டே இரு. தந்தை நீ உண்மையில் காணுமல் போனதாகவே நம்பிக்கொண் டிருக்கிருர். அவருக்கு எப்படித் தெரியும் நம் புத்திசாலித்தனம்? நாடகம் முடியப் போகிறது. இதோ வெற்றி, வெற்றி வருது!

துப்பறியும் சிங்கம்.
(அம்பலம்)

* * *

கடலூர்,
8-7-59.

சிங்கமே!

என்ன பதிலையே காணும்? என் மகன் கண்ணன் தப்பிவிட்டானு? வேறு எங்கேயாவது ஓடிப்போய் விட்டானு? என் மகன் எங்கே, எங்கே? கவலைப்படுகிறேன்; உடனே கடிதம், கடிதம்! கருணுகரன்.

* * *

சென்னை,
9-7-58.

கருணு,

உங்கள் மகன் இங்கேதான்இருக்கிருன். உடனே பணம்..பணம்..

து. சி. கம்.

* * *

கடலூர்,
10-7-58.

ஐயா கம்!

மகிழ்ச்சி. நாளை நான் சென்னைக்குக் கார் வாங்கும் விஷயமாக வருகிறேன். காரை வாங்கிக் கொண்டு அப்படியே உம்மிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பையனை அழைத்துக்கொள்கிறேன். க. கரன்.

* * *

கடலூர்,
13-7-58.

டேய் அம்பலம்!

எல்லாம் அம்பலம்! நம் திட்டம்'படீர்!' நான் உன் மாமா வீட்டில் பதுங்கி இருக்கும் நேரத்தில் தானு உன் மாமா தம் காரை விற்கவேண்டும்? என் தந்தை கார் வாங்குவதற்கு உன் மாமா வீடு தானு கிடைக்கவேண்டும்? தற்செயலாக அவர்முன் மாட்டிக் கொண்டுவிட்டேன். பிறகு என்ன? என்னைக் 'கல்தா' கொடுத்து, வீட்டுக்குத் தள்ளிக்கொண்டு வந்துவிட்டார். நம் திட்டம் பாழ், பாழ்!

கண்ணன்.

# இரு நண்பர்கள்

'மலரவன்'

ஜுரம் நன்ருக அடித்துக் கொண்டிருந்தது கிருஷ்ணனுக்கு. பிதற்றிக்கொண்டிருந்தான் அவன்.

அன்று பரீட்சை ஆரம்பிக்கும் நாள்! ஆனுல் அவனுல் பரீட்சைக்குப் போக முடியவில்லை.

'ரகு! என்னை மன்னித்துவிடு! உன்னை ஏமாற்றிவிட்டு அந்தக் கணக்குப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தேனே! ஆனுல், அது இப்பொழுது யாருக்கும் பயன்படாமல் இருக்கிறதடா!' அவன் ஜுர வேகத்தில் பிதற்றிக் கொண்டிருந்தான். சிறிது நேரம் அவன் சலனமற்றுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று—

'ரகு, நீ எப்படியடா பரீட்சை எழுதினுய்? உன் புத்தகத்தைத் தான் நான் பற்றிக்கொண்டு வந்து விட்டேனே! பாவிடா, நான்! பாவி!' அவன் தன் நிலை அறியாமல் கத்தினுன்.

*    *    *

ரகுவும் கிருஷ்ணனும் ஏழைப் பையன்கள். உபாத்தியாயருக்கு அவர்கள் இருவர்மேலும் தனி அன்பு உண்டு. நன்ருகப் படிக்கக் கூடியவர்கள். இருவரிலும் சிறிது சூடிகையாக இருக்கக்கூடியவன் ரகுதான! அதனுல், கிருஷ்ணனுக்கு ரகுவின்மேல் சிறிது பொருமை இருந்தது. ஆனுல், அவன் அதை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை!

''ஸார்! உங்களிடம் இருக்கும் அந்தக் கணக்குப் புத்தகத்தை எனக்குக் கொடுங்கள், ஸார்! என்னிடம் புத்தகமே இல்லை'' ரகு தான் தன் உபாத்தியாயரைக் கேட்டான்.

''அதற்கென்னடா! நான் கொடுக்கிறேன். கவலைப்படாமல் நன்ருகப் படி!'' என்று சொல்லிப் புத்தகத்தைக் கொடுத்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு வீடு சென்றுவிட்டான்.






ஒரு மாணவன்: ஏன், வரவர ஹெட்மாஸ்டர் அதிகமாக எரிந்து எரிந்து விழுகிறார்?

மற்றவன்: அவர் அறையில் புதிதாக மின்சார விசிறி போட்டிருக்கிறதல்லவா? அது கோபத்தை விசிறி விசிறி விடுகிறது, அடுப்புக்கு விசிறுவது போல!

—குஞ்சு

இதை அறிந்த கிருஷ்ணன் உபாத்தியாயரிடம் சென்றான்.

“ரகுவிடம் நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்தை எனக்கு வாங்கிக் கொடுங்கள், ஸார்!” என்றான்.

“உனக்குத்தான் நான் முன்பே, ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறேனே?”

“அதில் சில 'சேப்டர்' நன்றாக இல்லை, ஸார்! கிருஷ்ணனிடம் உள்ள புத்தகத்தில் அவை தெளிவாகப் போடப்பட்டிருக்கின்றன.”

“ரகுவிடம் உன் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொள்ளேன்!”

அவனுக்கு இதையும் விட மனமில்லை. அதையும் பெறாமல் இருக்கக் குணமில்லை. அவன் மனம் ஒரு திட்டம் போட்டது. 'ஒரு சில கணக்குகள் பார்த்துக் கொண்டு தருவதாகச் சொல்லி வாங்கிக்கொண்டு நாமே வைத்துக் கொண்டு விட்டால்....? அது தான் சரி!'

“ரகுவிடம் கொடுத்த புத்தகத்தை எனக்கு ஒரு நாள்மட்டும் வாங்கிக்கொடுங்கள், ஸார். நான் ஒரு சில கணக்குகளைப் பார்த்துக் கொண்டு திருப்பிக் கொடுத்து விடுகிறேன்” என்றான்.

அவரும் 'சரி' என்று அதை வாங்கிக் கொடுத்தார். ரகுவும் மன மகிழ்ச்சியோடுதான் அதைக் கொடுத்தான், இரண்டு நாட்களில் திரும்பி வரப்போகிறதே என்று! ஆனால்,—

இரண்டல்ல, மூன்றல்ல, இரண்டும் மூன்றுமான நாட்கள் ஆகிவிட்டன! புத்தகம், ரகுவின் கைக்கு வரவே இல்லை. ரகு. கிருஷ்ணனின் வீட்டிற்குச் சென்று பார்த்தால், அவன் ரகுவின் கண்களில் படவே இல்லை. கிருஷ்ணனின் மனமோ,—

'ரகுவிற்கு ஏன் இதைத் திருப்பித் தரவேண்டும்? புத்தகம் இல்லாமலே, அரை வருடப் பரீட்சையில், முதல் மார்க் வாங்கவில்லையா? அதே மாதிரி, இப்பொழுதும் வாங்கிக்கொள்ளட்டுமே?' என்றது. அதனால்தான் அவன் ரகுவைப் பார்க்கவே வரவில்லை. மேலும் ரகு தன் வீட்டிற்கு வருகிறான் என்று தெரிந்தாலே மறைந்துவிடுவான்.

படிப்பில் பொறாமை இருக்க வேண்டியதுதான். ஆனால், அந்தப் பொறாமை, தானும் படிக்க வேண்டும்; படித்து முதல் மார்க் வாங்க வேண்டும் என்ற ஆசையில் எழுந்து, முயற்சி செய்வதற்கு அது வழி செய்யவேண்டும். அப்படியின்றி, 'ஒருவனைக் கெடுத்துத் தான் வாழ்ந்துவிடலாம்' என்பது நல்லதல்ல.



பரீட்சையும் வந்து விட்டது!

உபாத்தியாயர் வகுப்பில் போட்ட கணக்குகளையும் தான் தன் நோட்டில் போட்டிருந்த கணக்குகளையும் மட்டுமே, பார்த்துச் சென்றிருந்தான், ரகு பரீட்சைக்கு! அவன் உள்ளிருந்த 'நம்பிக்கை' என்ற ஒன்று அவனைக் கவலைப்படாமல் இருக்க வழி செய்தது!

பரீட்சை எழுதினான்! அவன் எதிர் பார்த்துச் சென்றவைகளே பரீட்சையில் கேள்விகளாக வந்திருந்தன. அவன் நன்றாகவே எழுதினான். பரீட்சை அறையில் அவன் கண்கள் கிருஷ்ணனைத் தேடின. அங்கே கிருஷ்ணனைக் காணவில்லை. அவன் உடல், வெம்மை கொண்டு வியர்த்தது! அவன் மனத்தில் பொறாமையோ, கோபமோ இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, 'கிருஷ்ணனுக்கு என்ன நேர்ந்ததோ?' என்ற துடிப்பே இருந்தது. நண்பன் அல்லவா?

பரீட்சை எழுதிவிட்டு, நேராகக் கிருஷ்ணன் வீட்டிற்குச் சென்றான் ரகு! அங்கே.—

'ரகு! நீ எப்படியடா பரீட்சை எழுதினே? உன் புத்தகத்தைத் தான், நான் பறித்துக்கொண்டு வந்து விட்டேனே! நான் பாவிடா, பாவி!' என்று பிதற்றிக்கொண்டிருந்தான் கிருஷ்ணன். அவனுக்குத் தன் நிலை தெரியாது. தன்னைச் சுற்றி உள்ளன தெரியாது. ஆனால், அங்கே ரகு நிறைந்திருந்தான். அவனுக்கு ரகுவை, ரகுவின் பிம்பத்தை நன்றாகத் தன் மனக் கண்ணாடியில் காணமுடிந்தது.

ரகுவின் கண்கள் நீரைச் சொரிந்தன. அவனுக்கு, என்ன சொல்வதென்றே புரியவில்லை. அவன்,—

''நான் நன்றாக எழுதியிருக்கிறேன். நீ கவலைப்படாமல் தூங்கு!'' என்றான். அது கிருஷ்ணனின் காதில் ஏறினதாகவே தெரியவில்லை. கிருஷ்ணன், தான் பிதற்றியதையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தான்.

ரகுவின் கைகள் குவிந்தன.

'என்ன சோதனை இது, இறைவா? என்னால் ஓர் உயிரும் கஷ்டப்பட வகை செய்யாதே, இறைவா!' என்று அவன் உள்ளம் உருகிக் கேட்டது!

கருணையங்கடலான கடவுள் அவனுடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காமலா இருப்பார்! விரைவில் கிருஷ்ணன் உடல் நலம் பெற்றான். இப்போது அவன் ரொம்பவும் நல்லவன்!

# செட்டியாரின் சிக்கனம்

**பி. எஸ். வி.**

வண்டி கிளம்ப இன்னும் சிறிது நேரம் இருந்தது. அப்பொழுதுதான் பரக்கப் பரக்கத் தம் சாமான்களுடன் வந்தார் கறுப்பண்ணன் செட்டியார். சிறிது முன்பே வந்திருந்தால் அவரே சாமான்களையெல்லாம் ஒவ்வொன்ருய்த் தூக்கிக்கொண்டு போய் வண்டியில் வைத்திருப்பார். வண்டி கிளம்பும் சமயமாய்ப் போய் விடவே மூன்றே காலணு கொடுத்துப் போர்ட்டர் வைக்கும் படியாகிவிட்டது. இது அவர் மனத்திற்கு மிக்க வருத்தத்தை அளித்தது. கறுப்பண்ணன் செட்டியார் மிச்சம் பிடிப்பதில் அவ்வளவு கெட்டிக்காரர். கருமி, லோபி என்னும் பிறர் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பவராய் இருந்தால் எப்படிப் பணத்தைச் சேர்த்திருப்பார்? இதுதான் செட்டியாரின் வாழ்கைத் தத்துவம்.

வண்டி கிளம்பிவிட்டது. அப்போதுதான் ஒருவர் அவசரமாக ஓடிவந்து வண்டியில் ஏறினுர். அழகாக வாரி விடப்பட்ட கிராப்- வெள்ளை ஜிப்பா. அதன் மேல் ஒரு வெள்ளை டவல். தூய வெண்மையான வேஷ்டி. பார்வைக்குக் கௌரவமானவர் போல் தென்பட்டார்.

''தாங்கள் எங்கே போக வேண்டும்?'' என்று அவரைக் கேட்டார் செட்டியார்.

''காஞ்சீபுரம்.''

''பார்த்தீர்களா, சொல்லி வைத்தாற்போல! ரொம்ப நல்லதாய்ப் போய்விட்டது. நானும் அங்கேதான் போக வேண்டும். அப்படியாளுல் நீங்கள் எனக்கு ஒரு சிறு உபகாரம் செய்கிறீர்களா?'' என்ருர் செட்டியார்.

''அதற்கென்ன, என்னுல் முடிந்த வரை செய்கிறேன்.''

''பிரமாதம் ஒன்றுமில்லை. இதோ என்னுடன் சில மூட்டைகள் கொண்டு வந்திருக்கிறேன். வந்த இடத்தில் கொஞ்சம் 'சரக்கு'ப் பிடித்துக்கொண்டு வந்தேன். நியாயமாகப் பார்த்தால் இதில் பாதிச் சாமான்களுக்குத்தான் சார்ஜ். வீணுக ஏன் ரெயில்வே காரனுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும்? ஆகவே எடை போடாமல் கொண்டு வந்துவிட்டேன். போர்ட்டர் வேறு கால் ரூபாய் சாப்பிட்டு விட்டான். இப்பொழுது நீங்கள் செய்யவேண்டியது என்னவென்ருல் டிக்கெட் எக்ஸாமினர் வந்து கேட்டால் இதில் பாதி மூட்டை உங்களுடையது என்று சொல்ல வேண்டும். அவ்வளவுதான். வேறொன்றும் இல்லை.''

''அதற்கென்ன செட்டியார்வாள்! பணமா, காசா? அவசியம் அப்படியே சொல்லுகிறேன்.''

''அப்படிச் சொல்லுங்கள், ஸார். இதையே வேறு யாரிடமாவது சொன்னுல் லோபி, கருமி என்று என்னைக் கேலி செய்வார்கள். பணத்தின் அருமை அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!''

''செட்டியார்வாள்! நான் இன்று சொல்லுகிறேன். பிறர் ஏதாவது உளறிக் கொண்டு போகட்டும். நமக்கு ஆக வேண்டியது, காரியம்! அவ்வளவுதானே!'' என்று சொல்லிக்கொண்டே அந்த மனிதர் வண்டியில் சாமான்கள் வைப்பதற்காகப் போடப்பட்டிருந்த ஊஞ்சல் பலகையில் ஏறிப் படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அவரிடமிருந்து பலத்த குறட்டைச் சத்தம் கேட்டது. இதற்குள் செட்டியார் காலத்தை வீண் செய்யாமல் மூட்டைகளை இரண்டு பாகங்களாகப் பிரித்து வைத்து




விட்டார். எக்ஸாமினர் வந்து கேட்கும்போது சந்தேகம் வரக் கூடாதல்லவா?

வாலாஜாபாத் ஸ்டேஷனை விட்டு ரெயில் கிளம்பியது. அப்பொழுது செட்டியார் உட்கார்ந்து இருக்கும் பெட்டியில் ஒரு டிக்கெட் எக்ஸாமினர் நுழைந்தார்.

செட்டியாருடைய டிக்கட்டை இனிஷியல் செய்து கொண்டே, ''இந்த மூட்டைகள் யாருடையவை?'' என்று கேட்டார். துளிக் கூடச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் முன் ஏற்பாட்டின்படி நடித்துக் காண்பித்தார் செட்டியார்.

எல்லோருடைய டிக்கெட்டையும் பரிசோதித்து விட்டுக் குறட்டை விடும் ஆசாமியிடம் சென்று, ''ஸார், டிக்கெட்!'' என்றார். பதிலில்லை. பலகையில் சிறிது ஓசைப்படுத்தினார். அவர் சிறிது அசைந்து கொடுத்தவாறே பாக்கெட்டில் கையை விட்டுப் படுத்திருந்தவாறே சிறிது நேரம் துழாவினார். பாக்கெட்டில் இருந்தவற்றை எல்லாம் எடுத்து வெளியே போட்டார். ஆனால் டிக்கெட் மாத்திரம் இல்லை.

பாக்கெட்டில் இருந்தது இரண்டணா தான். டிக்கெட்டைக் காணோம்.

பலகையில் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை தேடினார். கீழே தேடினார். காணவில்லை. அது எப்படி அகப்படும்? டிக்கெட் வாங்கியிருந்தால்தானே அகப்படும்? பேந்தப் பேந்த விழித்துக் கொண்டே, ''காணாமல் போய் விட்டது, ஸார்!'' என்றார்.

''அதெல்லாம் வீண் பேச்சு. சரி, எடும் ஐயா!'' என்று சொல்லிக் கொண்டே நோட்டுப்புத்தகத்தையும், பென்ஸிலையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார். ''ஸார், என்னிடம் இருப்பது இந்த இரண்டணாதான். வேறு ஒரு நயா பைசாக் கூடக் கிடையாது. வேண்டுமானால் என்னுடைய இந்த மூட்டைகளில் ஐந்து ரூபாய் மதிப்புள்ள சாமான்களை எடுத்துக்

கொள்ளலாம். நான் வேறு என்ன செய்ய முடியும்?'' என்றார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த செட்டியாருக்கு வயிறு 'கப கப' வென்று எரிந்தது. அவன் தாடையில் 'பளார்! பளார்!' என்று நாலு அறை விடலாமா என்றிருந்தது. என்ன செய்வது! காரியம் கெட்டு விட்டது. மறுமொழி பேசாமல், விள்ளாமல் விரியாமல் புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவர் கையில் கொடுத்தார்.

டிக்கெட் எக்ஸாமினர் அடுத்த பெட்டிக்குத் தாவியதும், ''துரோகி! அயோக்கியன்!'' என்று அந்த ஏமாற்றிய நபருக்கு நல்லுரைகள் வழங்க ஆரம்பித்தார் செட்டியார்.

அதற்கு அந்தப் பேர்வழி, ''இந்த ரெயில்காரனுக்குப் பணத்தை வீணில் கொட்டுவதில் செட்டியாருக்கு உள்ள வருத்தம், எனக்குக் கிடையாதா என்ன! அதென்ன ஸார், செட்டியாருடைய பணம் மாத்திரம் ஒசத்தி?'' என்று முணு முணுத்தார். இதில் என்ன ஆச்சரியம்?

செட்டியாரின் சிக்கனம் எப்படி?



## சூரியன்

பூத்த மலர், புதியமலர்
பொங்கும் சூரியன்!
மூத்த கடலில் காலை வந்து
முளைத்த சூரியன்!

★

விரிந்த மலர், பிரிந்த மலர்
வெய்ய சூரியன்!
எரிந்த பகலில் உச்சி ஏறி
எரித்த சூரியன்

★

சாய மலர், தூயமலர்
சாய்ந்த சூரியன்!
மாய மாக மேற்கில் சென்று
மறைந்த சூரியன்!

'தமிழ் ஒளி'

# நீங்களும் நானும்

**ஆர்வி**

**கே. சந்திரசேகரன், சென்னை-17**

கே: புகழும் செல்வமும் பெறுவது எப்படி?

ப: புகழ் பெறுவதற்கு ஏதாவது ஒரு திறமை இருக்க வேண்டும். செல்வம் பெறுவதற்குப் பொறுமை இருக்க வேண்டும்.

**எம். என். சுசிலா, மதுரை**

கே: புத்திசாலி யார்? மேதை யார்?

ப: நண்பர்கள் சொல்வதை நன்ருகக் காது கொடுத்துக் கேட்டு, அதைச் சுயமாகச் சிந்தித்துப் பார்த்து, சிறந்ததைத் தேர்ந்து காரியங்கள் செய்பவனே புத்திசாலி. எல்லாவற்றிலும் சிறந்ததை எல்லாவற்றையும்விட விரைவாக உணர்ந்தறிபவனே மேதை.

**வி. மதுரம், திருவாரூர்**

கே: சங்கீதத்தைக் கடல் என்கிருர்களே, ஏன்?

ப: கடலினுள்ளே கண்ணுக்குப் புலப்படாத பல பொருள்கள் இருப்பதுபோல, சங்கீதத்துக்கு அங்கமாக ஸ்வரங்கள், ஸ்வர பேதங்கள், கிரமங்கள், மூர்ச்சனைகள், தாளங்கள், லயங்கள், மாத்திரைகள், ஸ்தானங்கள், பிரஸ்தாரங்கள் என்று பல இருக்கின்றன. நவரஸங்களையும் உண்டாக்கக் கூடியது சங்கீதம். அந்தக் கடலைக் கடக்கத் தெரிந்தவர்கள் கடவுளைக் காண்கிருர்கள் என்பது நம்முடைய நம்பிக்கை.

**த. வேலுமணி, திருவள்ளூர்**

கே: சென்னை மந்திரி சபையில் மிகுந்த அநுபவமுள்ள மந்திரி யார்?

ப: கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள்தான். சுதந்தரம் பெற்ற பிறகு ஏற்பட்ட எல்லாக் காங்கிரஸ் மந்திரிசபைகளிலும் அவர் மந்திரியாகப் பதவி வகித்திருக்கிருர். நடுவில் சில காலமே அவர் மந்திரி பதவி இல்லாமல் இருந்திருக்கிருர்.

**பி. மோகன், பம்பாய்-41**

கே: வயதை நீடிக்கச் செய்யும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

ப: ஆமாம்; கண்டுபிடித்திருக்கிருர்கள். பிரபல உயிர்நூல் நிபுணரான டாக்டர் மெச்னிகாவ் என்ற ரஷ்ய விஞ்ஞானியே இதற்கு வழிகாட்டியாக இருந்தவர். அவருடன் இருந்த டர்க்டர் பொகொமெலட்ஸ் என்ற விஞ்ஞானி இளமையை நீடிக்கச் செய்யும் ஸீரம் ஒன்றைத் தயாரித்தாராம். அதை அதிகமான அளவில் இன்னும் தயாரிக்கவில்லை. விரைவில் தயாரிக்கலாம். ஆகவே நாமெல்லாம் 120 வயதுவரை வாழ்வதுகூடச் சாத்தியமாகலாம்.

**வ. சுப்பிரமணியன், திண்டுக்கல்**

கே: மூன்ரும் உலக யுத்தம் என்று ஒன்று ஏற்பட்டால் என்ன என்ன குண்டுகளைப் புதிதாக உபயோகப்படுத்துவார்கள்?

ப: அது எனக்குத் தெரியாது. ஐன்ஸ்டீனிடம் ஒருவர் இதேபோலக் கேட்டதற்கு அவர், ''மூன்ரும் உலக யுத்தத்தில் என்ன என்ன உபயோகப்படுத்தப் போகிருர்களோ, எனக்குத் தெரியாது. ஆனல் நாலாம் உலக யுத்தம் வந்தால் அப்போது, என்ன உபயோகிப்படுத்துவார்கள் என்று வேண்டுமானல் சொல்வேன். வெறும் கல்லைத்தான் ஒருவர்மீது ஒருவர் வீசிக் கொள்வார்கள்'' என்ருராம். அதே பதில் உனக்கும் போதும். மூன்ரும் உலக யுத்தம் என்று வந்தால் மனித நாகரிகமே அழிந்துவிடும் என்பது அவருடைய கருத்து, இப்பொழுதுள்ள

குண்டுகளே உலகத்தை அழிக்கப் போதுமானவை.

ஜி. ஏ. கலியமூர்த்தி, திருப்புறம்பியம்

கே: 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' பத்திரிகையைப்பற்றிச் சில விவரங்கள் தர வேண்டுகிறேன்.

ப: ரீடர்ஸ் டைஜெஸ்ட் என்பது பத்திரிகைகளின் கதம்பம். இதை டேவிட் வாலஸ் என்பவர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் தொடங்கினார். அவரும் அவர் மனைவியும் மட்டுமே இருந்து தொடங்கிய அந்த மாதப் பத்திரிகையில் இன்று சுமார் 2700 பேர்கள் வேலை செய்கிறார்கள். 11 மொழிகளில் 19 பதிப்புக்கள் அது வெளியாகிறது. குருடர்கள் படிப்பதற்கான பதிப்பு கூட உண்டு. மொத்தம் ஒன்றரைக் கோடிக்குமேல் அந்தப் பத்திரிகை விற்பனையாகிறது. பெருமூச்சு விடவேண்டும் போல் இருக்கிறதல்லவா?

பெரிய நல்லையா, மணக்காடு

கே: 'விப்ஜியார்' என்றால் என்ன?

ப: ஏழு வர்ணங்களின் முதல் எழுத்துக்களைக் கொண்ட ஒரு சொல். (VIBGYOR) ஊதா, பழுப்பு, நீலம், பச்சை, மஞ்சள் ஆரஞ்சு, சிவப்பு ஆகிய நிறங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்.

பா. முத்துகிஷ்ணன், பீளமேடு

கே: பணம் படைத்தவர்களின் முதல் எதிரி யார்?

ப: கூடவே இருந்து நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டிக்கொண்டே இருப்பவன். பிடிக்காவிட்டாலும் நல்லதைச் சொல்லவேண்டும்; பிரியமானதைச் சொல்வது என்ற பழக்கமுடையவன் சுயநலக்காரன்.

மிதிலை வேந்தன், ஆனைமலை

கே: கட்டபொம்மனை ஒரு சாரார் வீரன் என்கிறார்கள்; இன்னொரு சாரார் கொள்ளைக்காரன் என்கிறார்கள். எதை நாங்கள் நம்புவது?

ப: இன்னொரு சாராரை உனக்குத் தெரியுமா?

பி. மயில்சாமி, மல்லேகவுண்டன் பாளையம்

கே: புல்கானின் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: தலைவிதியை நொந்து கொண்டு பாங்குகளுக்குத் தலைவராக இருக்கிறார்.

ஜி. லியோனி, திருவையாறு

கே: காலமும் அலையும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்கிறார்களே, இதன் உண்மையான கருத்து என்ன?

ப: இயற்கை நிர்த்தாட்சிண்ணியத்துடன் கடமையை ஆற்றுகிறது என்பதுதான்.

இரா. கருப்பையா

கே: கண்ணனுக்குக் கட்டுரை, கவிதை, கதை முதலியவற்றை எழுதியனுப்புவோருக்குச் சம்மானம் உண்டா?

ப: கண்ணனில் பிரசுரமாகும் எந்த விஷயத்திற்கும் சம்மானம் உண்டு. எழுதியனுப்புவோருக்கெல்லாம் சம்மானம் கொடுப்பது என்றால் நயா பைசாவாக மாற்றிக் கொடுத்தாலும் மாதம் லட்ச ரூபாய்க்குமேல் போய்விடும்.

வி. கருணாகரன், சென்னை-5

கே: காகிதம் முதல் முதலில் யாரால் செய்யப்பட்டது?

ப: முதல் முதலில் அதைச் செய்தவர்கள் சீனாக்காரர்கள்.

என். பாலசுப்பிரமணி, உதகமண்டலம்

கே: ஒலிம்பிக் பந்தயங்களில் அதிகப் பரிசுகள் பெறும் நாடு எது?

ப: இரண்டு தடவைகளாக அதிகப் பரிசுகள் பெறுகின்ற நாடு ரஷ்யாதான்!

இரா. வடிவாம்பாள், சிந்தாதிரிப் பேட்டை

கே: மனிதன் மிருகமாக மாறுவது எப்போது?

ப: மனிதன் எப்போதும் ஒரு மிருகமாகத்தானே இருக்கிறான்!

கே: அழகின் உறைவிடம் எது?

ப: தூய்மையான எண்ணங்கள் நிறைந்த உள்ளமே அழகின் உறைவிடம்.




**சம்பந்தம்**

அன்புள்ள தம்பிக்கு,

நலம் நாலும் பெருகுக. நீ எழுதிய பதில் கடிதம் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சி. உன் கடிதத்தைப் படித்து முடித்த பிறகு உனக்கு ஒன்று சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. அதைப் படிக்க நான் மிகவும் கஷ்டப்பட்டுப் போனேன். உன்னுடைய கையெழுத்தைப்பற்றிச் சொல்லவில்லை. நீ எழுதியிருக்கும் முறையைச் சொல்கிறேன். உன் மனத்தில் தோன்றியதையெல்லாம் வரிசைப்படுத்திக்கொள்ளாமல் முன்னும் பின்னுமாக எழுதியிருக்கிறாய். உன் மனத்திலுள்ளதை எழுத முடியாமல் நீ திண்டாடி இருப்பதையும் அதிலே காணமுடிந்தது. நேரில் என்னைப் பார்த்துப் பேசுவதுபோல் தெளிவாகவும் ஒழுங்காகவும் கஷ்டமில்லாமல் அழகாகவும் எழுதியிருக்கலாமே!

கடிதம் எழுதுவதே ஒரு கலைதான். நீ அதை (1) ஆரம்பம். (2) விஷயம். (3) முடிவு என்று பாகுபாடு படுத்திக்கொண்டு, இன்னும் சற்று ஒழுங்கான முறையில் அமைக்கவேண்டும். எப்பொழுதும் யாருக்குக் கடிதம் எழுதுகிறாயோ, அவர்களைத் தக்க முறையில் முன்னிலைப் படுத்தி எழுது. அதோடு எழுதப்போகும் பொருளைப் படிப்பவர்க்கு நேர் நின்று கேட்பதுபோன்ற உணர்ச்சி உண்டாகும்படி, தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதவேண்டும்.

கடிதம் எழுதத் தொடங்கு முன்னமேயே, எப்படியும் நீ 'இதை இதை எழுதவேண்டும்' என்று யோசித்துப் பார்த்திருப்பாய். பிறகு எழுதத்தொடங்கும் பொழுது எதை எதை முன்னால் தெரிவிக்கவேண்டும், எதைப் பின்னால் எழுதலாம் என்பதெல்லாம் அதை முன்பின்னாக ஒழுங்குபடுத்திக்கொள்வது முக்கியம்.

அதில் ஒரு கஷ்டமும் இல்லை. இந்தச் சின்னஞ் சிறு வயதிலேயே கடிதம் எழுதுவதில் நீ ஒருவித ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொண்டால்தான் நல்லது. பிறகு வயதாக வயதாக அது மேலும் மேன்மையாக விளங்கும். முதலில் சிறு சிறு வாக்கியங்களாக, கோர்வையாய்ப் படிப்பவர்களின் மனத்தில் பதியும்படி எழுதுவதே சிறந்தது.

சிறுவயதில் பத்மநாபன் என்றொரு பள்ளித்தோழன் எனக்கு உண்டு. உல்லாசப் பிரயாணத்தின் பொழுது அவன் எழுதிய கடிதத்தின் பகுதி இன்னும் என் மனத்தில் மங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது எனக்கு உடம்பு சரியில்லை. ஆதலால் நான் அவனோடு பிரயாணம் செல்லவில்லை. ''அனைவரும் மலையடிவாரத்திற்குப் பஸ்ஸில் ஏறிப் புறப்பட்டோம். அந்த மேடு பள்ளமான பாதையில் பஸ் தள்ளாடிக்கொண்டு சென்றது. ஆரம்பத்தில் மப்பும் மந்தாரமுமாயிருந்த வானம், போகப்போக ஒரே பயங்கரமாக

இருட்டிக்கொண்டு விட்டது. எப்படியும் போய்ச் சேருவதற்குள் மழை வராமல் இருக்கவேண்டுமே என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான் டிரைவர். அதோடு, 'இந்தப் பக்கம் நரிகள் அதிகம். தனி ஆளைக் கண்டுவிட்டால் விடாது' என்றெல்லாங்கூட சொல்லிக்கொண்டு வந்தான் அவன். அந்தச் சூழ்நிலை யாவரையுமே சற்றுப் பீதி கொள்ளத்தான் செய்தது. அதற்கேற்றாற்போல் சற்று நேரத்திற்குள் எங்கள் பஸ்ஸிலேயே நரி ஊளையிடும் சத்தம் கேட்டது. பட்டென 'பிரேக்' போட்டுவிட்டு, டக்கெனக் குதித்து விட்டான் டிரைவர். ஆனால் கடைசியில் நம் கிளி மூக்கு ரங்கன்தான் அப்படி ஊளையிட்டதாகத் தெரிந்தது. அனைவரும் விழுந்து விழுந்துச் சிரித்தோம். அந்தச் சமயத்தில் நீ உடனில்லாமற் போய்விட்டாயே! அதில் எனக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா? சமயம் பார்த்து உனக்கு உடம்புக்கு வந்ததே! சீக்கிரத்தில் உனக்குக் குணமாக வேண்டுமென்று கடவுளை வேண்டுகிறேன்...."

இது மாதிரி, உல்லாசப் பிரயாணம் போகாத எனக்கு, அப்படிச் சென்றிருந்தால் ஏற்படக்கூடிய இன்பத்தை இக்கடிதத்தின் மூலம் அளித்தான் அந்தப் பள்ளித் தோழன். இத்தனை வருஷங்களாகியும் இன்னும் நான் அதை மறக்கவில்லையென்றால், அவன் கடிதத்தை எத்தனை தூரம் அநுபவித்திருப்பேன் என்று உனக்கு ஒருவாறு விளங்குகிறது அல்லவா?

பண்டைக்காலம் முதல் நம் நாட்டில் கடிதம் எழுதும் பழக்கம் மிகவும் போற்றி வளர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் காலத்தில் கடிதங்களை வசன நடையில் எழுதுவதில்லை. எல்லாவற்றையும் வெறும் பாடல்களாகவே வரைந்து வந்துள்ளார்கள். அத்தகைய கடிதங்கள் 'சீட்டுக் கவிகள்' என்று வழங்கப்பட்டன. இந்தக் கடிதங்கள் மூலம் தற்காலத்தில் நாம் பல அரிய செய்திகளை அறிந்து கொள்ளலாம். தற்காலத்திலும் சிறந்த பெரியோர்கள் எழுதிய கடிதங்களை, கடிதங்களாக மட்டும் மதிக்காமல், சிறந்த இலக்கிய நூல்களாகவே போற்றி வருகிறோம்.

மேல் நாட்டில் ஹாரேஸ் வால்போலும், செஸ்டர் பீல்டும் சிறந்த கடித எழுத்தாளர்கள். செஸ்டர் பீல்டு பெருமகனார் தம் மகன் பிலிப்புக்கு அறிவுரையாக எழுதிய கடிதங்களைத் தொகுத்து, ஒரு சிறந்த நூலாகவே அமைத்துள்ளார்கள்.

நம் நாட்டிலும் பிரதமர் நேருஜி தம் செல்வ மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்* மிகவும் பிரசித்தமானவை. அவ்வண்ணமே காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்கள் தம் குமாரி லட்சுமிக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பும்* மிகவும் போற்றத் தக்கது. அவற்றையெல்லாம் அவர்கள் தங்கள் குழந்தைக்காக மட்டும் எழுதியதாகக் கொள்ளக் கூடாது. உன் போன்ற குழந்தைகளுக்காகவே எழுதியிருப்பதாக எண்ணி நீ படிக்க வேண்டும். படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே என் அவா. ஏனெனில் அவை உன்னுடைய அறிவை வளர்க்கக் கூடிய அரிய செய்திகள் அடங்கியவை. பெரியவனானால் நீ பெற்ற ஒளியால் பலருக்கு அறிவுச் சுடரை ஏற்றி வைக்க அவை உதவும்.

உனதன்புள்ள அண்ணன்.

---

*இந்த இரண்டு புத்தகங்களும் கலைமகள் காரியாலயத்தில் கிடைக்கும்.

இரவு ஒன்பதரை மணி சுமாருக்குப் பக்கத்து வீட்டில் விசாரித்து விட்டுப் பஞ்சு ஸாரின் வீட்டுக்குப பட்டாபியும் சாமிக் கண்ணும் வந்தார்கள்.

''என்ன, பஞ்சு ஸார்! என்ன விஷயம்..அடுத்த வீடு காலியாகி விட்டது போலிருக்கிறதே!...'' என்றார் சாமிக்கண்ணு.

''ஆமாம்! ஏன் என்றுதான் தெரியவில்லை... சாயந்தரமே போயிட்டான்..''

''என்ன!.. எப்படி.. லாரி கொண்டுவந்து சாமான்களை..?''

''சேச்சே! யார் சொன்னது? சும்மா கடஸா! அப்படியே பூட்டிட்டுப் போயிருக்கான். உள்ளே சாமான் எல்லாம இருக்கு. வாசல்லே சும்மா 'வாடகைக்கு விடப்படும்' என்று போர்டு மட்டும் போட்டிருக்கான்.''

''ஹா!'' என்றார் ஹெட்கான்ஸ்டபிள சாமிக் கண்ணு.

அதற்குள் பட்டாபி, ''அது சரி! அந்தப் பெண்?..'' என்றார்.

''அவளை அங்கேயே பூட்டி வைச்சிருக்கான்..''

உடனே பட்டாபி, ''சாமிக் கண்ணு! வாங்க! முதல்லே போய் அந்தப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு போய் விடுவோம்...வந்து தேடட்டுமே...!'' என்றார்.

''அது தவறாயிற்றே, ஸார்! எப்படி அந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போவது?''

''எல்லாம் தவறு ஒன்றுமில்லை. வாருங்கள் பார்க்கலாம். வேலைக்காரனை ஓர் அதட்டல் போட்டால் போகிறது..''

''உஷ் நீங்கள் சும்மா இருங்கள். நான் நைஸாகக் காரியத்தை முடிச்சுக்கிறேன..வாருங்கள்.''

இருவரும் மறுமுறை அடுத்த வீட்டிற்குப் போனார்கள். ''இந்தா ஐயா!..இங்கே வா!..'' என்று வேலைக்காரனைக் கூப்பிட்டார் சாமிக்கண்ணு. அவன் வந்தான்.

''கொஞ்சம் வீட்டைத் திறந்து காண்பி..இந்தா ஐயா, குடி வர வேண்டும்..''

''ஏன் காலையிலே வாங்களேன்? இப்போ இருட்டு..ஐயா!''

''இல்லை! பரவாயில்லை. திற..''

''வாடகை ரொம்ப ஜாஸ்திங்க.. இந்த வீடு என்னத்துக்கு..?''

''அதெல்லாம் வேண்டாம், கதவைத் திற..''

''வாடகை நூற்றைம்பது, ஸார்..''

''என்னது? இப்ப நூறுன்னே.. அதுக்குள்ளே..?''

''ஆமாம், ஸார்! வாடகை 150 தான்..''

''சரி, ஐயா! வீடு அவசியம் வேண்டியிருக்கு..''

''காலையிலே தான் ஸார், கதவைத் திறக்கமுடியும்..''

''ஏன் ஐயா? கதவைத் திற, எலெக்டிரிக் விளக்குதான் இருக்கே?''

''திறக்கச் சாவி?..''

''அதான் வச்




பரிசுபெற்ற தொடர்கதை!




சிருக்கியே, பொய் சொல்லாதே! திற ஐயா, கதவை!''

''முடியாது, ஸார்!''

''ஏண்டா, முடியாது?''—கோபம் வந்தது அவருக்கு.

''ஸார்! இது.. இது..''

''டேய்! திறடா கதவை!.. 'வாடகைக்கு விடப்படும்'னு போர்டு போட்டுவிட்டு, என்ன கதை விடறே? கதவைத் திறக்கிருயா, இல்லையா?''—சாமிக்கண்ணு போட்ட அதட்டலில் அவன் கதவைத் திறந்தான்.

வீட்டிற்குள் போனார்கள். அங்கே சாமான்களெல்லாம் அப்படியே கிடந்தன.

''டேய்! என்னடா இது, காலி வீடா?''

'இல்லே, ஸார்! இது..''

''மாடிதான் காலியா?''-என்றார் சமயோசிதமாகப் பட்டாபி.

ஹெட்கான்ஸ்டபிள் மாடிக் கதவைத் திறக்கப் போனார். வேலைக்காரன் வந்து தடுத்தான்.

அவனைத் தள்ளிவிட்டுப் பலவந்தமாகக் கதவைத் திறந்து மாடிக்கு இருவரும் விரைந்தனர்.

அங்கே—

பீரோக்கள் வரிசையாக இருந்தன. அலமாரிகள் பூட்டியபடி இருந்தன. மேஜைகள் அப்படியே இருந்தன. அறையின் நடுவே கட்டில் இருந்தது. கட்டிலில் கொசுவலை கட்டியபடி இருந்தது. கோட் ஸ்டாண்ட், நாற்காலி, டைம்பீஸ் எல்லாம் அப்படியே இருந்தன. ஆனல்.. ஆனல்..

அந்தக் கட்டில் காலியாக இருந்தது. ஆமாம். அந்தப் பைத்தியக்காரப் பெண் எங்கே?..அந்தப் பெண் எங்கே?..

## 15. திட்டம் வகுத்தனர்

"அடுத்த வீட்டுக்காரர் சொல்வதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது..அவன் போகும் பொழுது அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு போகவில்லையாம். நிச்சயமாகச் சொல்கிறார். அவள்தான் தானாக அங்கிருந்து தப்பியிருக்க வேண்டும்.."

"இருக்கட்டும் அப்பா! நான் கவனிக்கிறேன். எப்படியும் அவர்கள் சாமான்களை எடுக்க வந்து தானே ஆகவேண்டும். இன்னும் ஒரு வாரம் நாம் அவர்களை விட்டுப் பிடிப்போம்...பார்க்கலாம்.." என்றான் ஸம்பத்.

பட்டாபி பேசாமல் எழுந்து சென்றார்.

ஸ்ரீதரன், "ஸம்பத்! வா! இனிமேல் நாம் ஒரு நிமிஷத்தைக்கூட



விணுக்கக்கூடாது. போய்த் தேடலாம் வா!..'' என்ருன்.

''எங்கே தேடுவது..இந்தப் பட்டணத்தில்..?'' உனக்கு இந்தப் பட்டணத்தைச் சுற்றிக் காட்ட வேண்டுமென்று ஆசை. வந்து மூன்று நாட்கள் ஆகின்றன. உனக்கு ஒன்றையுமே காண்பிக்க வில்லே..''

''அதைவிட இந்தக் கேஸ் சுவாரஸ்யமாக இருக்கிறதே!'' என்ருன் ஸ்ரீதரன்.

''சரி, வா! டென்னிஸ் கொஞ்ச நேரம் ஆடலாம். அப்புறம் எங் கேனும் கிளம்பலாம்..''

இருவரும் டென்னிஸ் மட்டையை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போனூர்கள்.

* * *

முதல் நாள் மாலே துரை, விநாயகத்தின் வீட்டில் அடிபட்டு விழுந்ததும், விநாயகம் அலறியதும், செல்லாயி மிகவும் பயந்து விட்டாள். அநாவசியமாக ஓர் ஆளேக் கொலே செய்துவிட்ட பழி வந்துவிட்டதே என்று நடுங்கிப் போய்விட்டாள்.

''செல்லாயி! என்ன செய்யறது? மூச்சு இல்லேயே..''

''என்னுங்க? நான்..நான்.. மெள்ளத்தான்..''

''ஆளு மூச்சையே காணுேமே, செல்லாயி?''

''ஐயோ! இது மயக்கமாக இருக்கக்கூடாதா?''

''அவன் மயக்கம் தெளிஞ்சு எழுந்திருச்சாலும்..செத்துப் போனலும் ஆபத்து..''

''வாங்க! அப்படியே இழுத்துக் கிட்டுப் போய்த் தென்னந்தோப்பிலே போட்டுடுவோம்..''

''இன்னும் இருட்டட்டும்..''

''அதுக்குள்ளே எழுந்திரிச்சுட் டான்ன..?''

''மூச்சுப் பிடிச்சு அமுக்கிப்பிட வேண்டியதுதான்'' என்ருன் விநாயகம்.

இருட்டியபின் துரையைத் தூக்கித் தென்னந்தோப்பில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு வந்தார்கள், வீட்டுக்கு வந்ததும் செல்லாயி, ''முதல்லே பெட்டியை எடுத்து வேறே இடத்திலே.. கொண்டு போய் வையுங்க..'' என்று எச்சரித்தான். உடனே இருவரும் பெட்டியைப் புதைத்த இடத்திலிருந்து சிரமப்பட்டு வெளியே எடுத்தார்கள். அவர்கள் பெட்டியை வெளியே எடுப்பதற்கே வெகு நேரமாகிவிட்டது.

தென்னந்தோப்பில் கிடந்த துரை மயக்கம் தெளிந்து எழுந்தான். அவனுக்கு, நடந்த சம்பவங்களெல்லாம சிறிது சிறிதாக ஞாபகத்திற்கு வந்தன. தோள் பட்டையில் பலமான அடி. ஆதலால் ஒரு கை அசைக்க முடியாமல் பயனற்றதாக ஆகியிருந்தது. மெள்ள எழுந்தான். அவன் மனத்திலே ஆத்திரம் மூண்டது. எப்படியும் விநாயகத்திடமிருந்து அந்தப் பெட்டியைப் பிடுங்காமல் போகக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டான். அந்தக் கும்மிருட்டில் கூட ஏதோ குறி வைத்து நடந்தான். விநாயகத்தின் வீட்டின் அருகில் வருவதற்கு அவனுக்கு அதிக நேரம் ஆகவில்லே. அங்கே விநாயகமும் செல்லாயியும் பேசிக்கொண்டிருந்தது நன்ருகக் காதில் விழுந்தது. கொல்லேக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்தான். அப்பொழுதுதான் அந்த இரும்புப் பெட்டியை வெளியில் எடுத்துக்கொண்டிருந்தார்கள் அவர்கள். ஒரே பாய்ச்சலில் அவர்களின் நடுவே பாய்ந்தான் துரை பெட்டியை ஒரு கையில் வாங்கிக்கொண்டான். விநாயகம் 'பிசாசு'தான் வந்துவிட்டது என்று பயமடைந்து பின் வாங்கினுன். செல்லாயி 'கிரீச்..' சென்று கத்தினுள். துரை இரும்புப் பெட்டியின் இருளில் மறைந்து போனுன்.

அதே இரவு சுமார் பதினெரு மணிக்குச் சுப்புவின் தகப்பனர் தூங்காமலேயே திண்ணேயில் படுத்துக்கொண்டிருந்தார். அடுத்த வீட்டுக் 'கேட்' திறக்கும் சத்தம் கேட்டு, கடைக்கண்ணுல் கவனித்தார். வந்தவன் துரைதான் ''எங்கேடா எதிராஜ்? தூங்கிட்டானு?'' என்று கேட்



டான் வேலைக்காரனை. அவன் மெதுவாகப் பதில் சொன்னான். துரை தள்ளாடித் தள்ளாடி அவ்வளவு தூரம் வந்திருக்கிறான். அவன் கால்கள் நிற்கவும் சக்தியில்லாமல் இருந்தன. நடந்து வந்த களைப்பை இன்னும் அதிகப்படுத்திவிட்டது தோள் பட்டையின் வலி. வீட்டு வாசலில் வேலைக்காரனுக்கு முன்னாலேயே, 'தடா'லென்று விழுந்து மூர்ச்சையானான். இந்தச் சாக்கில் பஞ்சு ஸார் அடுத்த வீட்டிற்கு ஓடினார்.

''என்ன? என்ன? யாரது?..'' என்றார்.

''ஒண்ணுமில்லே, ஸாமி! நீங்க போங்க ஸாமி.'' என்றான் வேலைக்காரன். பதற்றத்தில் கீழே விழுந்த இரும்புப்பெட்டி அவன் கவனத்தைக் கவரவில்லை. துரையைத் தூக்கிக்கொண்டு வேலைக்காரன் உள்ளே போன சமயம் 'பஞ்சு ஸார்' அந்த இரும்புப் பெட்டியைக் கவனித்து, தூக்கிக் கொண்டு வந்து விட்டார் தன் வீட்டிற்கு. பீரோவில் பத்திரமாக வைத்து மூடினார்.

சுப்புவுக்கு மாலையில் அந்தப் பையன் சொல்லிவிட்டுப் போனதிலிருந்து இருப்பே கொள்ளவில்லை. 'என்ன அவன் சொல்வான்?' என்று ஊகித்துப் பார்த்தான். அவனுக்குப் புரியவில்லை. இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை அவனுக்கு. அடுத்த வீட்டிலிருக்கும் ஆட்களிடம் தினமும் நாலணா வாங்குவது அவனுக்குப் போதவில்லை. ஏதாவது கொஞ்சம் ரூபாய் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. அந்த ஆசையை இன்னும் அதிகமாக்கினான் அந்த 'வேர்க்கடலை'. பணம் பணமாக அவர்கள் மட்டும் சேர்க்கிறார்களே நமக்குக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது அவனுக்கு. யோசித்துக் கொண்டே படுத்துக்கொண்டிருந்தான். மணி பதினொன்று அடித்தது. புரண்டு படுத்தான். வாசற்கதவைத் திறந்து கொண்டு அப்பா வருவது தெரிந்தது. 'பீரோவைத் திறந்து எதையோ வைக்கிறாரே, அது என்ன? அது என்ன பெட்டியா?..' தூங்குவது போல் கிடந்தான் அவன். அவர் போய்க் கால் மணி நேரத்திற்குப் பிறகு ஓசைப்படாமல் எழுந்திருந்தான். பீரோவைத் திறந்து, மண்ணால் அழுக்கடைந்த அந்த இரும்புக் கைப்பெட்டியை எடுத்தான். இரும்புப்பெட்டி கனத்தது. ஓசைப்படாமல் அதை எடுத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்று இரவுக்கு இரவே அதைப் புதைத்து வைத்தான் அந்த பிருகஸ்பதி!

மறுநாள் காலை பஞ்சு ஸார் ஆச்சரியப்பட்டுப் போனார். அதே மாதிரி துரையும்கூட பெட்டியைக் காணாமல் ஆச்சரியமடைந்தான். கடைசியில் சுப்புமட்டும் சந்தோஷமாக இருந்தான்.

* * *

ஒரு வாரம் ஓடிவிட்டது. ஸம்பத்தும் ஸ்ரீதரனும் தினமும் பட்டணத்தைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர். அந்த ஒரு வாரமும் 'பீச்'சில் வேர்க்கடலைக்காரப் பையன் கண்ணில் படவே இல்லை.

'கறுப்புக் கண்ணுடி' ஆளையும் காணவில்லை. ஒரு வேளை தலைமறைவாக இருந்து வேலையை நடத்துகிறார்களோ என்று சந்தேகித்தான் ஸம்பத். இதுவரை காணாத புதுக் கேஸாக ஆகிவிட்டது அது. மூன்று கேஸ்களிலும் அவன் வந்த சுவடு தெரியவில்லை..ஓர் இடத்தில் ஒரு பூட்டை உடைக்கவில்லை; கன்னம் வைக்கவில்லை. ஆனால் அளவிட முடியாத உயரத்தில் காவல், கட்டுப்பாடுகள் எல்லாம் தாண்டி எப்படி அவர்கள் போனார்கள்? மிதிலா விலாஸை விடச் சிறந்த பங்களா வேறு உண்டா! முதல் மாடிக்கு வேண்டுமானால் தண்ணீர்க் குழாய் வழியாக ஏறியிருக்கலாம். இரண்டாவது மாடிக்கு எப்படி ஏறிப் போனான்?..அப்படிப் போனாலும் அங்கிருந்து இரும்புப் பெட்டி இருந்த அறைக்குச் செல்வது என்பது எளிதில் ஆகக்கூடாத காரியம். அறைக்குச் செல்வதற்குள் மூன்று இரும்புக் கதவுகளைத் திறந்தாக வேண்டும். மொட்டை மாடியில் ஆகாயத்தில் தாவிக் குதித்துப் போயிருந்தால்தான். ஆனால் ஒன்று; திருட்டுப் போகும் பங்களாக்களெல்லாம் புதிதாகக் கட்டியவை. சௌகரியமாக அந்த 'மாய ஜன்னல்'களை வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. இவ்வாறெல்லாம் ஸம்பத் மனத்தில் யோசித்து வைத்துக்கொண்டிருந்தான்.

அன்று மாலை ஸம்பத் ஸ்ரீதரனை 'ஹார்ப'ருக்குக் கூட்டிக்கொண்டு போனான். போகும் வழியிலேயே அந்த ஆள் - கறுப்புக் கண்ணுடி ஆள்தான் - கண்ணில் பட்டு விட்டான். அவன்தான் அந்த வீதியில் சர்வ சுதந்தரமாகப் போய்க் கொண்டிருந்தான்.

''ஸ்ரீதரா! பார்த்தாயா?.... அவன்தானே? எங்கே போகிறான்?''

''அதோ; அந்தப் பங்களாவில் நுழைகிறானே?''

''சரி வா, நாம் நேராகப் போகலாம்!'' இருவரும் நேராகப் போனார்கள். அந்தக் கறுப்புக் கண்ணுடி கவனித்ததாகத் தெரியவில்லை. அங்கே எதிராஜ் நின்று கொண்டிருந்தான். இன்னும் இரண்டு மூன்று பேர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். ஸம்பத்தும ஸ்ரீதரனும் கடற்கரையில் உலாவினார்கள்.

''ஸ்ரீதரா! இப்பொழுது என்ன செய்யலாம்?..அப்பாவுக்குப் போன் பண்ணிப் பார்க்கலாமா?''

''பார்க்கலாம்! இவர்களுக்கு ஹார்பரில் ஏதோ வேலை இருப்பதால்தான் இங்கே குடியிருக்கிறார்கள்..''

''வா, ஸ்ரீதரா! 'பப்ளிக் டெலிபோ'னில் போன் பண்ணிவிட்டு வரலாம்..''

இருவரும் 'பப்ளிக்' டெலிபோன் இருக்கும் இடத்திற்குப் போனார்கள். ஸம்பத் வீட்டு நம்பரை அழைத்தான்.

''நான்தான் ஸம்பத் பேசுகிறேன்..ஹார்பர்லேருந்து.. ஒரு முக்கிய விஷயம்..அந்த ஆள் இங்கே இருக்கிறான்..''

''எந்த ஆள், ஸம்பத்?''

''அவன்தான் 'கறுப்புக் கண்ணுடி'..''

''கறுப்புக் கண்ணுடியா?.. இப்பத்தான் பார்த்தேன்.''

''எங்கே பார்த்தீர்கள்?.... இங்கே இப்பொழுது இருக்கிறானே!''

''இதோ!..இப்பொழுதுதானே நம் வீட்டு வாசலோடு போனான். ஓர் ஆளைப் பின்னால் அனுப்பியிருக்கிறேன்..''

''இங்கே....இப்பொழுதுதான் பார்த்தேன். ஏற்கனவே கே. வி. எஸ். லாரி ஷெட் இருந்ததே அதிலே குடியிருக்கிறான். இப்பத்தான் பார்த்தேன்..''

''என்ன ஆச்சரியமா இருக்கே!''

''அந்த ஆள்தானே? நன்றாகப் பார்த்தீர்களா?..''

''நன்றாகப் பார்த்தேன்.. அவனேதான்?''

''சரி! நான் சிறிது நேரத்தில் வருகிறேன்'' ஸம்பத் டெலிபோனை வைத்தான்.

''என்ன இது? மாயாஜாலமாக இருக்கே?'' என்று கேட்டான் ஸ்ரீதரன்.

''என்னமோ புரியவில்லை. வா, கொஞ்சநேரம் காற்று வாங்கி விட்டுப் போகலாம்.'' ஸம்பத்தும் ஸ்ரீதரனும் டவுன் பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வந்த பொழுது பட்டாபி வீட்டில் இல்லை.

ஒரு வாரத்திற்கு முன்பு எதிராஜ் வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்தானல்லவா? அப்பொழுது அந்தப் பைத்தியக்காரப் பெண்ணை அங்கேயே விட்டு விட்டுத்தான் வந்தான். அவன் 'கோ - டவு'னுக்கு வந்த பிறகு தான் திடீரென்று அவனுக்கு ஒரு கவலை பிறந்தது. 'ஒருகால் அந்தப் போலீஸ் ஆட்கள் அந்தப் பெண்ணைக் கொண்டு போய் விட்டால்..?' என்ற கவலைதான்! இந்தக் கவலை வந்ததும் தன் ஆள் ஒருவனை அழைத்து ரகசியமாக ஏதோ சொன்னான். சரியாக எட்டரை மணி சுமாருக்கு அந்த ஆள் ஒரு பெரிய பெட்டியைக் கொண்டு வந்து அவன் முன் வைத்தான். ஆமாம்! அந்தப் பெட்டிக்குள்தான் அந்தப் பெண் கொண்டு வரப்பட்டாள். அவள் கொண்டு வரப்பட்டதும்தான் எதிராஜ் மூச்சு விட்டான். கோ-டவுனிலேயே ஓர் அறையில் அவளைப் பூட்டி வைத்தான். ஒரு வாரமாக அவனும் வெளியில் எங்கும் அசையவில்லை.

அவன் மனத்திற்குள் ஒரு திட்டம் உருவாகி விட்டது. எல்லாச் சாமான்களையும் கப்பலில் ஏற்றி விட்டுத் தானும், துரையும் மலேயாவுக்குப் போய் விடவேண்டியது தான். பிறகு ஒரு வருஷம் கழித்துத்தான் வரவேண்டும். அவன் அந்தத் தீர்மானத்திற்கு வந்ததும், எல்லாச் சாமான்களையும் 'பாக்' செய்தான். எல்லாம் அந்தப் பழைய பங்களாவிலேயே கிடந்தன. அவனுக்குச் சொந்தமாக ஒரு 'டாக்ஸி' இருந்தது. மலேயாவுக்குக் கப்பல் என்றைக்குப் போகிறது என்று விசாரித்துக் கொண்டான். 'வருகிற திங்கட்கிழமை கப்பல் கிளம்புகிறது. அதுதான் இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறதே! அதற்குள் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து விட வேண்டியதுதான். ஞாயிற்றுக் கிழமை இரவு, பங்களாவிலிருந்து எல்லாப் பொருள்களும் வந்துவிட வேண்டும். அந்தப் பெண்ணைத் தனியாகக் கூட்டிக் கொண்டு போக முடியாது. யார், என்ன என்ற கேள்விகள் எழும்பும். பெட்டிகளோடு பெட்டிகளாகப் பார்ஸல் செய்யவேண்டியதுதான். மூச்சு இருந்தால் இருக்கிறது, இல்லாவிட்டால் தொலையட்டும். அவளால்தான் இனிமேல் வரும்படிக்கு வழி இல்லையே?..கொல்லவும் மனம் வரமாட்டேனென்கிறது. போகட்டும். அதுதான் சரியான வழி'. இவ்வாறெல்லாம் துரையும் எதிராஜும் திட்டம் வகுத்துக் கொண்டார்கள்.

(தொடரும்)

---

# சிட்டுக் குருவி

கூரை மேலே இருக்கும்;
குந்தி, சீட்டி அடிக்கும்;
ஊரைச் சுற்றிப் பறக்கும்;
ஓடி இரை பொறுக்கும்..
பஞ்சு போலப் பறக்கும்..
பாக்குப் போல இருக்கும்
கொஞ்சு கின்ற சிட்டுக்
குருவி நிறம் பட்டு!

—'தமிழ் ஒளி'.

# கள்ள நரியா? குள்ள நரியா?



### காப்டன் சேஷாத்திரிநாதன்

கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது. கள்ளன் கள்ளன்தான் என்று நமக்குத் தெரியும். குள்ளன் அவனுடைய குறையை மறைத்துக்கொள்ள பொய்களை வாரி வீசுவான். உண்மையும் பொய்யும் கலந்து பேசுவதால், எப்பொழுது உண்மை பேசுகிறான், எப்பொழுது பொய் பேசுகிறான் என்று தெரிந்துகொள்ள இயலாது. குள்ளன், கள்ளன் என்று இரண்டு சொற்களும் ஓர் எழுத்தினால்தான் வித்தியாசப்பட்டிருக்கிறது. அதனாலேதான் இந்த முதுமொழி, எனக்கு அநேகம் குள்ளர்களைத் தெரியும். அவர்கள் அனைவரும் ரொம்பவும் நாணயமுடையவர்கள்.

குள்ள மனிதர்கள் நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் குள்ளநரி கள்ளநரிதான். குள்ளநரி ரொம்பவும் தந்திரமுள்ள பிராணி என்று கேட்டிருக்கிறோம். அதைப் பற்றிக் கதைகளும் கேட்டிருக்கிறோம். குடியானவனுடைய கோழிகளையும் ஆட்டுக்குட்டிகளையும் திருடியதாக எவ்வளவோ கதைகள் உண்டு.

நரி தந்திரமாய்க் கொக்கை விருந்துக்கு அழைத்து, தட்டிலே பாயசம் வைத்து, ''நீயும் சாப்பிடு, நானும் சாப்பிடுகிறேன்'' என்றது. கொக்கு கொத்திக் கொத்திப் பார்த்தது. அதற்குள் நரி அவ்வளவு பாயசத்தையும் சாப்பிட்டுவிட்டது, ஏமாந்த கொக்கு நரியைப் பதிலுக்கு எப்படி ஏமாற்றியது என்று உங்களுக்குத் தெரியும்.

'நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்' என்று ஒரு முதுமொழி உண்டு. நரி விருந்து கொண்டாட வேணுமானால் நண்டுகளைப் பிடித்துத் தின்னுமென்று நினைப்போம். ஒருவேளை நரிக்கு நண்டு ரொம்பப் பிடித்தமாயிருக்கும். இதைப்பற்றி ஒரு கட்டுக்கதை உண்டு. நரிப் பெண்ணுக்குக் கல்யாணம். நரியம்மா, ''நண்டுப் பாயசம் பண்ணவேணுமே'' என்றதாம். நரியப்பா தலையைச் சொறிந்துகொண்டு, ''என்னடா செய்வது?'' என்று யோசித்ததாம். 'நண்பன் கொக்கைக் கொண்டு நண்டு பிடித்துத் தரச் சொல்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு கொக்குவிடம் போயிற்று. ''கொக்கே, கொக்கே, நண்டு பிடிச்சுத் தா, உனக்கும் நண்டுப் பாயசம் பண்ணித் தறேன்'' என்று சொல்ல, கொக்கு, ''அன்றைக்கு நீ ஏமாற்றினாயே, அதுபோல் ஏமாற்றுவாய், நான் மாட்டேன், போ'' என்றதாம். நரி, ''ஏமாற்றவில்லை, சத்தியமாய்ச் சொல்லுகிறேன்'' என்றதாம்.

கொக்கு, அதை நம்பி, குளத்திற்குச் சென்று நண்டுகளைப் பிடித்துக் கொடுத்தது. நரியம்மா பாயசம் பண்ணிற்று. நரிப்பெண் கல்யாணத்திற்குக் கொக்கு வந்தது. ''பாயசம் எங்கே?'' என்றது. ஒரு குடத்திலே பாயசம் நிறைத்து, அதை ஒரு பெரிய தட்டிலே வைத்துவிட்டது நரி. கொக்கு பாயசம் சாப்பிட மூக்கைக் குடத்துக்குள்ளே இட்டது. குடத்தில் ஓர் ஓட்டை உண்டு. ஓட்டையைப் புளியால் தந்திரமாக அடைத்திருந்தது நரி. கொக்கின் மூக்கு அதைத் திறந்துவிட்டது. பாயசம் தட்டிலே வந்துவிட்டது. நரி நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டது. கொக்கு ஏமாந்து போயிற்று. பஞ்சதந்திரத்தில் வெகு ரசமான நரிக் கதைகள் பல இருக்கின்றன. நரியின் திறமையைப்பற்றி உண்மைக் கதைகளும் இருக்கின்றன.

பிரெஞ்சு நாட்டிலே ஒருவர் குள்ளநரியைப் பழக்கி வைத்திருந்தாராம். அது இவருடன் ரொம்பவும் நேசமாயிருந்ததாம். ஆனால் அண்டை வீடுகளிலிருந்து புகார் வந்தபடியே யிருந்ததாம். அடுத்த வீட்டுத் திண்ணையில் ஒரு ஸ்திரீ முட்டை வியாபாரம் செய்து வந்தாள். கூடையிலிருந்து முட்டையை ஒவ்வொன்றாய் எண்ணிக்கொண்டிருந்தபோதும், வேறு காரணத்தால் எங்கேயாவது திரும்பியிருந்தபோதும் முட்டைகள் மாயமாய் மறைந்தனவாம். முட்டை விற்பவள் அடுத்திருப்பவர்கள் பேரில் குற்றம் சாட்டினாளாம். இரண்டு மூன்று நாள் கழிந்துதான் முட்டைகள் திருடுபோனது எப்படி என்று அறிய முடிந்தது. அடுத்த வீட்டிலிருந்து குள்ளநரி முன்காலை நீட்டி, கொஞ்சங்கூட சத்தம் உண்டாகாமல் முட்டைகளைத் திருடியதாம்.

ஒருவர் நரியைக் குட்டியாயிருக்கும்போதே எடுத்து வளர்த்தாராம். இவர் போன இடமெல்லாம் ஒரு நாய்போல் இந்த நரி செல்லுமாம். இவரிடம்மட்டும் நரி விசுவாசமாயிருந்ததாம். ஆனால் அண்டை வீட்டுக் கோழிகள் மாயமாய் மறைந்துபோகுமாம். உணவுப் பண்டங்களும் அப்படியே திருட்டுப் போகுமாம். இப்படியிருந்தும் குள்ளநரியை இவர் காப்பாற்றி வந்தார். வேறு வழியில்லாமல் அண்டை வீட்டுக்காரர்கள் ஒன்று சேர்ந்து விஷம் ஊட்டி நரியைக் கொன்று விட்டார்களாம்.

''வேடர்கள் குள்ளநரியைப் பிடிக்க வரும்போது தப்பித்துக் கொள்ள முடியாமற்போனால் குள்ளநரி இறந்ததுபோல் பாசாங்கு செய்யும். அப்பொழுது அதைக் காலால் புரட்டித் தள்ளலாம், தலை கீழாய்த் தூக்கலாம், தோளில் தூக்கிப் போட்டுச் செல்லலாம், செத்ததுபோல் கிடக்கும். செத்த நரி எதற்கு என்று சொல்லிக் கீழே போட்டவுடன் எடுக்குமாம் ஓட்டம்'' என்று நரியின் தந்திரத்தை வருணிக்கிறார் ஓர் ஆசிரியர்.

நரி வளை தோண்டி வாழும். மரப் பொந்துகளை வீடாக்கிக் கொள்ளும். முயல் வளையின் வெளியே காத்திருந்து முயல் வந்த



தும் கவ்விக் கொன்றுவிட்டு அதன் வளையைத் தன் வீடாக்கிக் கொள்ளும்.

எலி வளையைப்போல் நரி வளைக்கும் பல வாயில்கள் உண்டு. இவற்றின் நடுவே ஒரு பள்ளம். அதில் தான் மாமிச உணவை யெல்லாம் சேமித்து வைக்குமாம். அபாயம் வரும்போது தப்பித்துக் கொள்ளவே இத்தனை துவாரங்களாம்.

நரியும் நாயும் ஒரே பொதுக் குடும்பத்தைச் சேர்ந்தவை. எனினும் இரண்டுக்கும் எப்பொழுதும் பகைதான். வேட்டை நாய்கள் மனிதனுக்கு அநுசரணையாயிருந்து நரி வேட்டைக்கு உதவி செய்யும்.

நரி மனிதன் கையில் அகப்படக் கூடாதென்று மனிதர்கள் நடமாடாத இடத்தில் வளைகளைத் தோண்டி வைத்துக் கொள்ளும். வேட்டை நாய்கள் துரத்திக் கொண்டு வரும்போது வேகமாய்ப் பாய்ந்து ஓடி, பொந்துக்குள் பதுங்கிக் கொள்ளும். நரியைக் காட்டிலும் பன்மடங்கு தந்திரமுடையவனல்லவா மனிதன்! வேட்டையாடும் முன்னே இந்த வளைகளைத் தேடி அதன்மீது பறவை இறகு, வர்ணத் துணி நூல்கயிறு எல்லாம் பரப்புவான். நாய்களால் துரத்தப் பட்ட நரி பொந்தின்மீது கிடக்கும் இறகையும் துணியையும் பார்த்து, 'இது சதிக் குறிதான்' என்று நினைத்துத் திகைத்து நிற்கும். இந்த வேட்டை நாய்கள் வந்து நரியைப் பிடித்துக்கொள்ளும்.




**ஒருவன்:** என்ன பிரதர், வருகிற மாதத்தில் எனக்குப் பிறந்த நாள் வருகிறது.

**மற்றவன்:** அடேடே, அதைக் கொஞ்சம் ஒத்திப் போட்டுக் கொள்ளக்கூடாதா?

**ஒருவன்:** ஏன்?....

**மற்றவன்:** உனக்கு ஏதாவது 'பிரசண்ட்' பண்ணவேண்டாமா? கையில் தம்பிடிகூட கிடையாது. என்ன செய்வது?

—குஞ்சு

## கண்ணன் கழகம்
### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....................

விலாசம்....................

....................

பிறந்த தேதி..............

(தேதி, மாதம், வருஷம்

செப்.-1, 1958

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

G: 8. வி. கோபாலன், கடலூர் என். டி; 9. கோவிந்தன், திரு வெண்ணெய்நல்லூர்; 10. எஸ். கணேஷ், கொழும்பு-7.

H. 2. ஏ. வி. எம். ஹாஜா, கோலாலம்பூர்; 3. எஸ். கே. ஹாஜா நஜீமுதின், சோழமாதேவி.

I. 1. க. இந்திரகுமார், யாழ்ப்பாணம்; 2. அ. ம. இப்ராகிம், மேட்டுப் பாளையம்; 3. க. இ. ரா. இந்திரமோகன், சேலம்-1

K. 14. கு. கோதண்டபாணி, குறிஞ்சிப்பாடி; 15. ஆர். கிருஷ்ண ராஜ், சென்னை-7: 16. ப. கிருஷ்ணன், ஈரோடு; 17. சா. காதர் முகைதீன், செய்துங்கநல்லூர்; 18. ம. கலியமூர்த்தி, திருவிடைமரு தூர்; 19. வே. கிருஷ்ணன், எஸ். ஆர். கே. வித்தியாலயம்: 20. ஏ. காஜா நஜிமுதீன், ஏர்வாடி; 21. கோ. கேசவன், காவேரிப்பட்டணம்; 22. கி. கலியபெருமாள், திருக்கடையூர்; 23. கோ. கண்ணப்பன், அண்ணூர்; 24. கோ. கண்ணன், சூலூர்: 25. கண்ணுசாமி, துறையூர்;

R. 29. வி. ராமசந்திரன், காந்திபுரம், கோவை; 30. கே. எம். ரங்கசாமி ஒரத்தநாடு; 31. அ. ராமசாமி, சென்னை-17; 32. பி. எஸ். ராமகிருஷ்ணன், கொழும்பு-13; 33. எஸ். ராமமூர்த்தி, துறையூர்; 34. டி. என். எஸ். ராகவன், புதுடில்லி-5; 35. ஆர். ராஜாராமன், சென்னை-17; 36. பி. எஸ். ரங்கநாதன், நாமக்கல்; 37. டி. எஸ். ராஜு, நுவரேலியா, இலங்கை; 38. சி. ராஜகோபால், அரியலூர்; 39. ஜி. ராகினி, கும்பகோணம்; 40. க. ரா. ராமகிருஷ்ணன், பாளையங் கோட்டை; 41. ஜி. ராஜு, சின்னமலைக்குன்று; 42. பி. வி. ராஜ், நோர்வுட், இலங்கை; 43. ரெ. ராஜகோபாலன், அருள்புரம்; 44. தெ. ரகோத்தமன், அரகண்டநல்லூர்; 45. வீ. ந. ராஜேந்திரன், தஞ்சை; 46. எம். எஸ். எம். ராசின்பரீத், கொழும்பு-11; 47. ஸி. ராகவன், சேலம்; 48. எம், ராமநாதன், சென்னை-17.

S. 33. கே. என். சினிவாசன், மண்டபம் காம்ப்; 34. கே. என். ஷேக் அலாவுதீன், ஒரத்தநாடு; 35. எஸ். எஸ். சொல்லரசு, சிறுதை யூர்; 36. எஸ். சித்தி, ஊர் எழுதவில்லை; 37. ந. சோமாஸ்கந்தன், கொழும்பு-15; 38. என். செல்வராஜா, கல்முனை, இலங்கை; 39. வி. ஈ. சீனிவாசன், அழகாபுரம்; 40. என். சேஷாத்திரி, நன்னிலம்; 41. வி. ஜி. சாமி, யாழ்ப்பாணம்; 42. ஆர். சிவசுப்பிரமணியன், கரியாப்பட்டணம்; 43. வி. பி, சண்முகம், உளுந்தூர்ப்பேட்டை; 44. கே. சுவாமிநாதன், கோயம்புத்தூர்-6; 45. க. வே. சுந்தரராஜன், கடலூர் என். டி; 46. ப. அ. செகப்பாண்டி, ஊர் எழுதவில்லை, 47. நா. சிவப்பிரகாசம், ஈரோடு; 48. ஆர். சேகர், நோர்வுட், இலங்கை; 49. சிதார், சிதம்பரம்; 50. எஸ். கே. ராஜுதீன், கணியூர்; 51. க. சுல்தான் மகமது பாஷா, சேலம்; 52. ஜி. சம்பந்தம், திருத்தருப்பூண்டி; 53. ச. சண்முகம், சுவாமிமலை; 54. எஸ். சீனிவாசன், தியாகதுர்க்கம்; 55. ஆர். சிவ சேகரன், திருவிடைமருதூர்; 46. எம். சந்திரன், திருப்பாதிரிப்புலியூர்; 47. எஸ். சுப்பிரமணியன், கண்டனூர்.

T. 1. பி. தங்கவேலு, சிவகிரி; 2. ப. தமிழன்பன், வால்பாறை; 3. எஸ். தியாகராஜன், முத்துப்பேட்டை.

V. 17. கே. வேங்கடசாமி, புவனகிரி: 18. கோ. வில்வநாதன், தென்கச்சிப்பெருமாள்நத்தம்; 19. வி. எல். வரதராஜன், சென்னை-13; 20. அ. வெள்ளியங்கிரி, அண்ணூர்; 21. பி. ஆர். விசுவநாதராவ், சென்னை-4; 22. க. வே. வசந்தா, கடலூர், என். டி. 23. க. வே. விஜய குமார், கருங்கல்பாளையம்; 24. வசந்த தேசாய், சப்தாபூர், தார்வார்; 25. சித. வேலாயுதம், தேவகோட்டை; 26. ஆர். வேணுகோபாலன், எல்லைநாயக்கன்பட்டி; 27. பி. எஸ். வீரராகவன், சென்னை-6

U. 1. உமா. புனு-3. W. 1. எம். ஏ. வாஹிது, கொழும்பு-12.

Y. எஸ். யுகராஜன், ராயபுரம்; 2. கே. எம். யோகானந்தம், குமாரலிங்கம். Z. சி. சேவியர் ராஜ், பாளையங்கோட்டை.

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M. 5542



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ. ந. பைசா |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2·00 |
| 2. | லீடர் மணி | ஆர்வி | 1·50 |
| 3. | சைனா சு-சூ | ஆர்வி | 1.50 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | 1·50 |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனா | 1·25 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1·00 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | 1·00 |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | 0·75 |
| 9. | பவழவல்லி | கி. ரா. | 0·75 |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | 0·62 |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | 0·50 |
| 12. | சமர்த்து மைனா | தி. ஜ. ர. | 0·50 |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | 0·50 |
| 14. | ஜக்கு | ஆர்வி | 0·50 |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0.50 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனா | 0·50 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனா | 0·50 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0·50 |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·50 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0·50 |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறார் | பெ. நா. அ. | 0·50 |
| 22. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·40 |
| 23. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·32 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·25 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·20 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0·20 |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0·20 |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0·20 |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0·20 |

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் இவை.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**